# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS', JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 2-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 38-ம் இலக்கம்

## 1958 ஐப்பசி 19 மிஷன் ஞாயிறு

### மகாவந். பீற்றர் சிஜிஸ்மோந்தி அதிமேற்றிராணியார் விடுத்திருக்கும் வேண்டுகோள்

மீண்டும் ஒருமுறை விசுவாசப் பரப்புதல் ஞாயிறு வருகிறது. நமது ஆண்டவரின் வருகையை விரும்பும் சகலரையும் அது தட்டியெழுப்புகிறது. அறுவடைக்குத் தயாராயிருக்கிற பல தேசங்களையும் உற்றுநோக்க அழைக்கிறது. செபத்தாலும், பரித்தியாகத்தாலும் அவர்கள்மத்தியில் ஆண்டவர்வருகையைத் துரிதப்படுத்தச் சகலரையும் அழைக்கிறது.

இந்தஞான அழைப்பு இன்று மிகவும் அத்தியாவசியமாய்த் தோன்றுகிறது. வேதபோதக நாடுகளைப் பாருங்கள். சிலஇடங்களில் வேதகலாபனை கிறீஸ்துவ சமூகங்களை அர்ச். இராயப்பரது மந்தையிலிருந்துநீக்கி விழுங்கப் பிரயத்தனஞ்செய்கிறது. எனினும், இரும்புத்திரைக்குப் பின்னும், மூங்கிற்திரைக்குப்பின்னும் தேவ இஷ்டப்பிரசாதம் பிரவேசித்து அங்குள்ள வேதசாட்சிகளுக்கும், ஏனையகிறீஸ்துவர்களுக்கும் ஊக்கமளித்து, அவர்களின் விசுவாசத்தைக் காப்பாற்றிவருகிறது. மற்றஇடங்களில் நமதுபரிசுத்த பாப்பரசரின் விருப்பத்திற்கிணங்கத் திருச்சபை நிலைநாட்டப்படுகிறது. இப்புதிய கிறீஸ்துவசமூகங்கள் இன்னும்சிறுதொகையினரே. ஆனுல், அவைகளைச்சுதேசமேய்ப்பர்கள் ஆண்டுவருகின்ருர்கள்.

வேதபோதக சரித்திரத்தில் ஒருபுதியயுகம் தொடங்குகிறது. கத்தோலிக்க திருச்சபையோடு ஒன்றித்துப்பிரமாணிக்கமாயிருக்கும் விசுவாசிகளின்தொகை அதிகரிக்கிறது. சுதேசகுருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமார் தங்கள்கடமைகளை நிறைவேற்றுவதுடன் நின்றுவிடாது, கிறீஸ்துவ பண்பாட்டின் எடுத்துக்காட்டுகளாகவும் விளங்குகின்றனர். தேவஅழைத்தல்அதிகரிக்கமட்டுமல்ல, கிறீஸ்துவவாழ்க்கையின் சகல துறைகளுக்கும் வழிவகுக்கின்றனர். சந்நியாசசபைகளும், விசுவாசப் பரப்புதல்சபையும் நல்லவேலை செய்துவருகின்றன.

பாப்பரசரின் விசுவாசப்பரப்புதல்சபை மேற்சொன்ன சபைகளுடன் ஒத்துழைக்கின்றன. விசுவாசப்பரப்புதல்சபை உலகில் சகலநாடுகளிலும் நிறுவப்பட்டு விசுவாசப்பரப்புதலில் ஆவல்மிக்க அதிகாரிகளால் நடத்தப்படுகின்றது. குருமாரிடையும், விசுவாசிகளிடையும் விசுவாசப்பரப்புதல் மனப்பான்மையைவளர்த்துச் சுமார் 700 வேதபோதகபிரதேசங்கள் சமுகமாய் நடைபெற வேண்டிய பொருளினைத் திரட்டுகின்றன.

காலஞ்சென்ற கருதினல் வான்ரேசம்ஆண்டவர் 1923-ம்ஆண்டு கூறியவார்த்தைகள் நமதுஞாபகத்திற்கு வருகின்றன "பாப்பரசரது விசுவாசப் பரப்புதல்சபைகளின் படிப்பனை பாராட்டுதற்குரியது. வேதபோதகசபைகளின் இயக்கத்தை நிலைபரமான ஞான அத்திவாரத்தின் மீதுகட்டி, விசுவாசிகள் ஞானப்பலன்களைச் சம்பாதிக்கும்வழியாகவும், அவர்களதுவிசுவாசத்தைக் காப்பாற்றும் அரணுகவும், அவர்கள்உண்மையில் அப்போஸ்தலர்களாகும் சாதனமாகவும் பாப்பரசரின் வேதபோதகசபைகள் விளங்குகின்றன"

ஆனுல், மிஷன்களின்தேவைகள் அதிகரித்துவருவதால் இச்சபைகள்சேகரிக்கும்பொருளுதவி முதலியன தேவைகளைப் பூர்த்திசெய்ய இயலாதிருக்கின்றன. எனவே, வேதபோதக நாடுகளின் பெயரால் — அவைகளுக்காகத் தங்கள்வாழ்க்கையைத் தத்தம்செய்திருப்பவர்களின்பெயரால் — வேதபோதகநாடுகளில் இருக்கும் நமதுசகோதர விசுவாசிகளின் பெயரால் உங்கள்ஒத்துழைப்பை நாடுகிறோம்.

I. வேதபோதக நாடுகளுக்காகச் செபியுங்கள்.

கிறீஸ்துவன் தனது விசுவாச அழைத்தலால் உலகமுழுவதையுமே தனதுஇருதயத்தில்கொண்டு உலகின் சகலகஷ்டங்களின்பெயராலும் செபிக்கவேண்டும். விசுவாசப்பரப்புதல் நாடுகளின் மீதுள்ள பற்றுதல் உங்கள்செபங்களுக்கும், திவ்வியநன்மைகளுக்கும், பரித்தியாகங்களுக்கும் ஒரு புதுஉற்சாகத்தை அளித்து, உங்களை உண்மையானசிநேகத்தில் வளரச்செய்யும்.

II. விசுவாசப்பரப்புதல் வேலைக்குப் புதியவேலையாட்களைத் திரட்டுங்கள்.

இதைவாசிக்கும் இளைஞர்களே, உங்கள்சிவியத்தை — உங்களுடையசக்திக[illegible] மேலானவழிகளில் உபயோகிப்பதைப்பற்றி எப்போதாவதுநினைத்ததுண்டா? நமது ஆண்டவரின் வார்த்தைகள்: "நீங்கள் உலகின் எத்திசையிலும் எனக்குச் சாட்சியாய் இருப்பீர்கள்" என்பவை ஞானஸ்நானம்பெற்ற சகலருக்குமே கூறியதென நினைத்ததுண்டா? இவ்வார்த்தைகள் விசேஷவிதமாய்இந்தக்காலத்துக்குப்பொருந்தும். விசுவாசிகள் குருத்துவத்தைப் பெருது போனுலும், பலவழிகளில் தங்கள்திறமைகளை வேதபோதகவேலைக்குத்தந்துதவ முடியும்.

III. உங்கள்பரித்தியாகங்களை விசுவாசப் பரப்புதலுக்காக ஒப்புக்கொடுங்கள். உங்கள் பணத்தை விசுவாசப்பரப்புதல் அலுவலுக்குத் தியாகஞ்செய்யுங்கள்.

எல்லோரும் கூடிச் சகோதரபாவத்தில் ஒத்துழைத்து, விசுவாசப்பரப்புதல்ஞாயிறை அனுசரித்து, "சகலத்தையும் நான் என்னிடம் இழுப்பேன்" என்ற நமது ஆண்டவரின்வாக்குத் துரிதமாய் நிறைவேற உதவிசெய்வோமாக!

✠ பீற்றர் சிஜிஸ்மோந்தி,
விசுவாசப்பரப்புதல் திருச்சங்கத்தின் செயலாளர்,
பாப்பரசரின் வேதபோதக உதவிச் சபைகளின் தலைவர்

## தினந்தோறும் பூசைகாணல்

— ஏ. ஜே. தாஸ் —

தினமும் பூசைகாண வசதி இருக்குமானுல் உன்சீவியகாலம் முழுவதும் தினமும்பூசைகாணத் தவருதே. நம்மில் எத்தனையோ பேர் பூசையின்மகத்துவத்தை நன்கு உணர்வாராகில், தினமும் அல்லது வாரந்தோறும் பலதடவையாகிலும் பூசைகாணத் தவற மாட்டார்கள். கத்தோலிக்கரில் ஒருசிலர்மாத்திரம்தான் தினமும் பூசைகாணும் வழக்கத்தைக் கையாண்டுவருகின்றனர். படித்தவர்களிற்சிலரே இந்தநல்ல வழக்கமுடையவர்களாக இருக்கின்றனர். ஆனுல், இன்னும் எத்தனையோலட்சம்பேர் மனதுவைத்தால் வாரத்தில் பலதடவையாகிலும் பூசைகாணலாம்.

பூசை அடைக்கலம்அடைபவர்களின் தஞ்சம். திக்கற்றவர்களின் உறைவிடம். சஞ்சலப்படுபவரின் ஆறுதல். ஏழைகளின் ஆஸ்தி. ஒருநாள்முழுவதும் செய்யக்கூடிய வேலையில் ஏற்படுகஷ்டம், கவலை, துன்பம் முதலியவைகளைத் தாங்குவதற்குப்போதுமான சக்தியையும், தைரியத்தையும், மனேதிடத்தையும் அந்த அரைமணிநேரத்தில் காணும்பூசை நமக்குக் கொடுக்கிறது. காலைப்போசனத்தை இழந்தாலும் இழக்கலாம். ஆனுல், தினமும் பூசையைமட்டும் இழக்கலாகாது.

சிலவேளைகளில் உலகத்தின் மேலும், ஏன், நம்மேலுமே நமக்குச்சலிப்பு ஏற்படுவதில்லையா? கஷ்டத்தின்பாரத்தால் தாக்கப்பட்டு, சோதனைகளால் அலையுண்டு, எதிர்பாராதகாரணத்தினுல் செல்வத்தைஇழந்து, வியாதியினுல்பலங்குன்றி, ஆதரவும், ஆறுதலுமின்றி இருக்கையில் கடவுளோடு ஒன்றித்திருக்கவும், அவருடைய ஆறுதல்பெறவும் நாம்எவ்வளவு ஆசிக்கிறோம். அந்தஆசை பூசையில் நிறைவேறுகின்றது. பூசையில் யேசுவின்திருஇருதயத்தின் மேல்சாய்ந்து ஆறுதலையும், தைரியத்தையும், சந்தோஷத்தையும் அடைகிறோம். பூசைகண்டு வெளிவரும்போது நமதுஆத்தும சந்தோஷத்தையும், சமாதானத்தையும், அமைதியையும் யாரால் எடுத்துரைக்கமுடியும்? நாம்தேவனைப் படத்தில்பார்ப்பதைப்போல் பூசையில்பார்க்காமல், அவரை மெய்யாகவே கண்கூடாக அப்பத்தின்குணங்களில் ஞானக்கண்ணுல் பார்க்கிறோம். என்னஆனந்தம்! கடவுளோடு ஐக்கியப்படுவதைவிட மானிடருக்குவேறுஆனந்தம் என்னஉண்டு.

அதிகாலையில் மோட்சலோகத்திலிருந்து சம்மனசுகள் இறங்கிவந்து பலிபீடத்தைச் சுற்றிநின்று தேவனைஆராதிக்கும்போது நீயும் தயங்காமல் சோம்பலின்றிப் போய்ப் பூசையில்பங்கெடுத்துக் கொள்ளலாம் அல்லவா?

தினமும் பூசைகாண்பது உன் சீவியத்திற்கு ஓர்ஆசீர்வாதம்; சாகும்தருவாயில் தேறுதல்; மோட்சத்தில் உனக்கு ஓர்நன்கொடை. ஆகையால், என்னகஷ்டம் வந்தபோதிலும்சரி, சோம்பலைவிலக்கு. தினமும்பூசைகாணநாளையிலிருந்தாவது முன்வருவாய்.

---

● மனிதரின்கருவிழிகள் அகற்றப்பட்டு 24மணிநேரத்துள் பிறர்கண்களில்பொருத்தப்படாவிடின் அவற்றிலுள்ள மிகச்சிறியநரம்புகள் இறந்துவிடுகின்றன. ஆனுல், நாய்களின் கருவிழிகளைச் சிலநவீனமுறைகளைக் கையாண்டு மாதக்கணக்கிலே பாதுகாத்து வைத்திருக்கலாமென்று பிரான்ஸிய இராணுவடக்டர்மார் கூறுகின்ருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

## தீபேத்தும் சீனக்கம்யூனிஸ்தர்களும்

நெடுங்காலமாக ஓர்சுதந்திரநாடாய் இருந்துவந்த தீபேத்தினுள் புகுந்துகொண்ட சீனக் கம்யூனிஸ்தஆட்சியை எதிர்த்துத் தீபேத்தியர்கள் நடத்திவரும் கலகமானது கடந்தசிலமாதங்களிலே மிகவும்உக்கிரமடைந்திருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. இந்தியாவிலே தீபேத்துக்கணித்தாயுள்ள டார்ஜீலிங்நகரிலுள்ள பத்திரிகை நிருபர் அனுப்பியசெய்திப்படி, இந்தக் கலகத்தில் 50,000 பேருக்குமேற்பட்ட சீனர்களும், 15,000தீபேத்தியர்களும், கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. வடக்குப்புறமாகச் சீனவிலுள்ள சிக்கியாங்மாகாணத்திலும், மேற்குப்புறமாக இந்தியாவின் எல்லைப் பகுதியையடுத்தும்போராட்டம்நடந்துகொண்டிருக்கிறது. ஈனவிரக்கமற்ற முறையிலேநடைபெற்றுவருகின்ற இந்தப் போராட்டத்தில் நாளொன்றுக்கு ஏற்படும்மரணங்கள் சுமார் மூன்னூறாக அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இருபக்கங்களிலும் எதுவுமே கைதிகளாக எவரையுமே கைப்பற்றுவதில்லை. காயமடைந்தவர்கள் எவருமே சிகிச்சை பெறுவதில்லை. அதற்குக்காரணம்,ஏறக்குறைய எல்லாமருந்துகளுமே இல்லாதிருப்பதாம். 1950-ம் ஆண்டு சீனக்கம்யூனிஸ்தர்கள்தீபேத்தின்மீது படையெடுத்தகாலமுதல் தொடர்பாகத் தீபேத்தியர்கள்நடத்திவந்த கொறில்லாப் போராட்டம் இன்றுமிகமோசமான நிலையை அடைந்திருக்கிறது.

* * *

## பருப்பு வகைகளில் மின்சக்தி

நம்நாட்டுமக்களிற் பெரும்பாலோர் சர்வசாதாரணமாக உபயோகித்துவரும் உணவுப்பொருட்களில் பருப்பு வகைகள் முக்கியஇடம் வகித்துவருகின்றன. தென்னாட்டில் பருப்புவகைகளுள் தலைசிறந்துவிளங்குவது துவரம் பருப்பு. பருப்புவகைகளைத் தாராளமாகச்சேர்த்து வருபவர்கள் முட்டை, மீன், இறைச்சி முதலியவற்றை நீக்கிவைத்தாலும் நல்லசவுக்கியமுடையவர்களாகவும், உரம்பெற்ற உடலையுடையவர்களாகவும் இருப்பதைக்காண்கிறோம். பருப்புகளில் நல்லஉணவுச்சத்து உண்டென்பதை மக்கள்நீண்டகாலமாகவே அறிந்திருக்கின்றனர். அவற்றில் மின்சக்தியுமிருப்பதாக இப்பொழுது தெரியவருகிறது. மனித உடலுக்குள் இயல்பாகவே இருந்துவரும் மின்சக்திநிலைஎன்ன? அது எந்த அளவில் இருந்துவருகிறது? என்பதைப் பற்றி மூன்றுபிரிவுகளில் வைத்திய நிபுணர்கள் கடந்தசிலகாலமாக ஆராய்ச்சிகள் நடத்திவந்தனர். இந்தஆராய்ச்சிகளின் பயனாகத்தான் பருப்புகளில் மின்சக்திபிருப்பதை அவர்கள்கண்டுபிடித்தனர். மனிதர்உட்கொள்ளும் உணவுப்பொருட்களில் மின்சக்தி இயற்கையிலேயே கலந்திருக்கிறது. சிறப்பாகப் பருப்புவகையிலும், தேயிலையிலும் இச்சக்தி மற்றப்பண்டங்களில் இருப்பதைவிட அதிகஅளவில் உறைந்து கிடக்கிறதாம். பருப்பு வகைகளைத் தாராளமாக உபயோகித்தால் வாயுப்பொருமல் உண்டாகும் என்று சிலர் அஞ்சுகின்றனர். பருப்புவகைகளை உண்போர் வெள்ளைப்பூண்டு, மிளகு, இஞ்சி, சுக்கு, பெருங்காயம் போன்ற வஸ்துக்களைத் தாராளமாக உபயோகித்தால் பொருமல் எதுவும் உண்டாகாது என்று வைத்தியர்களும், உணவுப் பொருள் ஆராய்ச்சி வல்லுனர்களும் கூறுகின்றனர்.

## பொருளாதார நிபுணரான இத்தாலிய பிரதமர்

இத்தாலியபிரதமராகச் சமீபத்திலே இரண்டாம்முறையாகத் தெரியப்பெற்றுள்ள கத்தோலிக்க பிரமுகரான சிஞ்ஞோர்அமின்தோர் பான்பினி அவர்கள் 1945-ம்ஆண்டுமுதல் தமது கட்சியிலே ஊக்கமாக உழைத்துவந்து, 1953-ம்ஆண்டு முதன்முறையாகப் பிரதமராகத் தெரியப்படுகிறவரை 1947-ம்ஆண்டிலிருந்து மந்திரிபதவி வகித்திருந்தார். 1954-ம்ஆண்டு பிரதமர்பதவியைக் கைவிட்டபின்னர் தமதுகட்சியின் காரியதரிசியாயினர். முதன்மைவாய்ந்த ஓர்பொருளாதார நிபுணரும், பொருளாதார, அரசியல், சமூகசம்பந்தமாக அநேகபுத்தகங்களை எழுதியுள்ளவருமான சிஞ்ஞோர்பான்பானி அவர்கள் அரசியல்பொருளாதாரத்திலும், பொருளாதார சரித்திரத்திலும் பட்டங்கள்பெற்றுள்ளவர். பிந்தியபட்டத்தை அவர் மிலான்நகர திரு இருதயநாதர் சர்வகலாசாலையிலே பெற்றுக்கொண்டார்.

* * *

## ஹங்கேரியர்களை ஏமாற்றமுயற்சி

லண்டன்நகரிலுள்ள ஹங்கேரிய தூதுவராலயம் கம்யூனிஸத்துக்காகச் செய்கின்ற பொய்ப்பிரசாரம் பெரிதும் வேடிக்கையானது. ஹங்கேரியிலே 1956-ம் ஆண்டு நடைபெற்ற சுதந்திர எழுச்சிக்கலகத்தின்போது சுதந்திரத்தைநாடித் தப்பியோடிப் பிரித்தானியில்போய் அடைக்கலம்புகுந்த ஹங்கேரியஅகதிகள் மாதந்தோறும் ஏறக்குறைய70பேர்விகிதம் ஹங்கேரிக்குத் திரும்புகிறார்களென்று இந்தஹங்கேரிய தூதுவராலயம் துண்டுப்பிரசுரமூலம் பிரசாரஞ்செய்து அங்குள்ள ஹங்கேரியமக்களை ஏமாற்றமுனைந்திருக்கிறது. ஆனால், பிரித்தானிய உள்நாட்டுமந்திரி காரியாலயமோ ஹங்கேரியிலிருந்து அந்தக்கலகத்தின் போது அங்குதப்பிவந்தவர்கள் 21,500 பேரென்றும், இவர்களில்பெரும்பாலானோர் அமெரிக்காவிலும், பிரித்தானிய சாம்பிராச்சியநாடுகளிலும் போய்க் குடியேறவிரும்பினர்களென்றும், 5,000பேர்சாம்பிராச்சியநாடுகளில் போய்க் குடியேறியுள்ளனரென்றும் புள்ளிவிபரம் தெரிவித்திருக்கின்றது. ஒருசிறுபாலார் அதாவது சுரங்கத் தொழிலாளரான ஒருசிறுதொகையினரே ஹங்கேரிக்குத் திரும்பியுள்ளனர். அதற்குக்காரணம் தாங்கள்எதிர்பார்த்தவாறு வரவேற்கப்படாமையே.

"ஒசேர்வாத்தோறே ரோமானோ" என்ற வத்திக்கான் தினவர்த்தமானியின் ஆசிரியரான கவுண்ட் ஜூசெப்பி தல்லா தொறேபிரபுவின்புதல்வரான சிஞ்ஞோர்பாவுலோ தல்லா ரொறேஅவர்கள் ரோமைநகரின் உதவிமேயராகத் தெரிவுசெய்யப் பெற்றிருக்கின்றார். விவாகஞ்செய்தவரும், ஆறு பிள்ளைகளுக்குத் தந்தையுமான இவர் மேயர் நகருக்குவெளியே சென்று சமுகமளிக்கவியலாதிருக்கும் போதெல்லாம் அவரிடமாகக் கடமை பார்த்துவருவார்.

நாயின்கண்களிலிருந்து 'கோர்ணியா'எனப்படும் கருவிழியையெடுத்து மனிதகண்களில் பொருத்துவதிலே பிரான்ஸிய இராணுவடக்றர்மார் வெற்றிகண்டிருப்பதாகப் பரீஸ்நகரிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. இந்தநவீனமுறை கண்வைத்தியத்தில் புரட்சிகரமான [illegible] ஏற்படுத்துமென அவர்கள்நம்புகிறார்கள்.

# அங்கும் இங்கும்

## கல்விமந்திரி கூறுகிறார்

"நான் இன்னும் 15வருடங்களுக்கு உயிர்வாழ்ந்திருப்பேன். இன்னும்20 அல்லது 30வருடங்களில் சிங்களம் உலகமொழியாகிவிடும் — அதாவது உலகமொழிக்குரிய அந்தஸ்தைப் பெற்றுவிடும்."

டபிள்யு. தஹநாயக,
கல்விமந்திரி.

"ஐக்கியதேசியக் கட்சியினது ஆட்சியின்கீழ் பொலிசரும், இராணுவத்தினரும் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டினார்கள். எம். ஈ. பி. அரசாங்கத்தின்கீழ் இந்தஇருபடைகளும் மக்களுக்கெதிராக அரசாங்கத்தைப் பாதுகாக்கப்பயன்படுத்தப்படுகின்றன."

திரு. எம். டி. எச். ஜயவர்த்தன,
முன்னைநாள் நிதிமந்திரி.

## நடக்கக்கூடிய காரியமல்ல

"சிங்களம் உலகமொழியானல் அதைக்கண்டு நான்பரவசமடைவேன். என்னைப்போலவே திரு. செல்வநாயகம் அவர்களும் தமிழ்உலகமொழியானல் ஆனந்தபரவசமடைவார். ஆனல், இவை நடக்கக்கூடிய காரியமல்ல. இந்நாட்டில் தமிழரும் வாழுகிறார்கள் என்பதை உணராதசிலர் எம்மிடையே தோன்றியுள்ளது பெரிதும்கவலைக்குரிய காரியம்."

திரு. டி. பி, இலங்கரத்ன,
தொழில்—வீடமைப்பு மந்திரி.

## நாடுண்டு — உழைப்புண்டு

"தமிழர் தென்னிலங்கைசென்று பல்வேறுதொழில்களிலும் ஈடுபடலாமென்றநம்பிக்கை போய்விட்டது. நாம் இனிமேல் நாடுண்டு, உழைப்புண்டுஎன்று எமதுநாட்டிலேயே இருப்போம். இருக்கிறநிலத்தைச் சீரியமுறைகள்கொண்டுசீராக்கிப்பயிரிடுவோம். மூலதனங்கொண்டு புதிய கைத்தொழில்களைத் தொடங்குவோம். புதியசாதனங்கள்கொண்டு கடற்றொழிலை விருத்திசெய்வோம்"

திரு. ஏ. அமிர்தலிங்கம்,
வட்டுக்கோட்டை எம். பி.

## எமது நோக்கமல்ல

காற்சட்டையிலிருந்து வேட்டிக்கு மாறுவது எமதுநோக்கமல்ல கடிதப் போக்குவரத்துகளை ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கு மாற்றவேண்டுமென்பதும் எமதுநோக்கமல்ல. உறவினர்களுக்கு உயர்ந்தபதவிகளை அளிக்கவேண்டுமென்பதோ, லஞ்சம்வாங்கி அரண்மனைகளையும், மாடமாளிகைகளையும் கட்டவேண்டுமென்ற எண்ணமோ எமக்குக்கிடையாது. இரத்தத்தை உறிஞ்சுபவர்களிடமிருந்து தொழிலாளிவர்க்கத்தைப் பாதுகாக்கவேண்டுமென்பதே எமதுஅரசாங்கத்தின் ஒரேநோக்கமாகும்."

திரு. டி. பி. இலங்கரத்ன,
தொழில்— வீடமைப்பு மந்திரி.

"இந்நாட்டில் சிங்களவர்களும், தமிழர்களும் காடையர்களிடமிருந்து காப்பாற்றப்பட மாட்டார்கள்என்பதை நாம்இப்பொழுதுஉணருகிறோம். சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் சம அந்தஸ்துஅளிப்பதன்மூலந்தான் சமாதானம் ஏற்படும். 1956-ம்ஆண்டு ஆனி மாதம் நாம்அவ்வாறுசொன்னோம்; பிரதமர் பண்டாரநாயகாவின் வகுப்புவாதக்கொள்கை ஒற்றுமையை உண்டுபண்ணுதென்று நாம்தொடர்ந்து கூறிவந்தோம். இன்று தியசேனகுமாரன் என்றுகொண்டாடப்படும் பிரதமர் இராணுவம் அல்லது பொலிஸ்பாதுகாப்பில்லாமல் தனதுவீட்டுக்குவெளியே போகமுடியாமலிருக்கின்றார். நமதுகட்சிஅங்கத்தவர்களோ இந்நாட்டின் எப்பகுதிக்கும் எவ்விதஇடைஞ்சலுமின்றியே போய்வருகிறார்கள்."

திரு. அனில் முனசிங்கா,
அகலவத்தை எம். பி.

## கோழைத்தனம்என்கிறார் பிரதமர்

சிங்கள—தமிழ்யுத்தம் புதியதொன்றல்ல. அந்தக்காலத்திலும் சிங்களவர்களும், தமிழர்களும் போர்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனல், ஒருகுற்றமும்செய்யாத தமிழர்களின் கடைகளைச் சுட்டெரிப்பதுபோன்ற கோழைத்தனமான நடவடிக்கைகளில் சிங்களவர்கள் இதற்குமுன் ஒருபோதுமே இறங்கியதில்லை. சகலசமூகங்களினதும கூட்டுநடவடிக்கையினலேயே இந்நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது. ஆகவே, சுதந்திரத்தின் பலனைச் சிறுபான்மையினரும் அனுபவிக்கச்செய்வது பெரும்பான்மையினரின் கடமையாகும்."

பிரதமர் பண்டாரநாயகா.

"இது ஒருபுத்தநாடென்றும், இங்குள்ள மக்கள்எல்லோரும் புத்ததர்மத்தைக் கடைப்பிடிப்பவர்களென்றும், ஆகவே, உலகின் ஏனையநாடுகளில்நடக்கும் அசம்பாவிதசம்பவங்கள் இங்குநடைபெறுவென்றும், நமது தலைவர்கள் கூறினார்கள். ஆனல், இந்த நாட்டிலே சமீபத்தில்நடந்த இனத்துவேஷ குழப்பங்களின்போது மக்கள் மிருகங்களாக மாறினார்கள். மனிதர்களை மிருகங்களாக மாற்றியது மொழிவெறி. இது நாம் வெட்கித்தலைகுனியவேண்டியவிஷயம். நாட்டிலேவிளைந்த இந்தக்குழப்பங்களுக்கு நமதுபிரதமர் பண்டாரநாயகாவே பொறுப்பாளியாவர். தமிழுக்கும் சிங்களத்துடன் சம அந்தஸ்துக்கொடுப்பதே இக்குழப்பங்கள்தீர வழியாகும்."

திரு. அனில் முனசிங்கா,
அகலவத்தை எம். பி.

## நாம் என்ன செய்யவேண்டும் ?

"எம். ஈ. பி. அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டரைவருடங்கள் ஆகிவிட்டன. அதாவது அதன்ஆயுளில் பாதிக்காலம் கழிந்துவிட்டது. இக்காலத்தில் அரசாங்கம்என்னசெய்தது? நாம் என்னசெய்யவேண்டும்? என்பனபற்றி ஆராயவேண்டிய கட்டத்திற்கு வந்துவிட்டோம்; விரைவிலே இந்தஅரசாங்கம் ஓர்மீளமுடியாத சிக்கலில்தான் சுழன்றுகிடப்பதை உணர்ந்து உங்கள் சம்பளங்களை வெட்டிக்குறைக்கும். அதனல் விலைவாசிகள் அதிகரிக்கும். அன்றியும் ரூபாவின்மதிப்பையும் அரசாங்கம்குறைக்கலாம். கடுதாசிநாணயங்களை மேலதிகமாக அச்சிட்டுப்பரப்பலாம். இப்பொழுதே வங்கிகளிலிருந்து பணம் பறந்தோடிக்கொண்டிருக்கிறது. இலங்கை நாணயத்திற்குப்பதிலாக வெளிநாணயங்களை மக்கள்விரும்ப ஆரம்பித்துவிட்டார்கள். இலங்கை நாணயத்தின்மீது மக்களுக்கு நம்பிக்கை குறைந்துவிட்டது. எம். ஈ. பி. அரசாங்கத்தின் இரண்டரைவருட வாழ்வின் விளைவுகள் இவைதான்."

டக்றர் என். எம். பெரேரு,
எதிர்க்கட்சித்தலைவர்.

---

தாரம்இழந்தவரும், 74வயதுடையவரும், 15பிள்ளைகளுக்குத் தந்தையுமான வண. எவ். ஈ. எம். லுக்கா செண்பிறதர் வருகிறமார்கழிமாதம் ஒல்லாந்திலுள்ள ஊஸ்றர்ஹவுட் எனுமிடத்திலுள்ள அர்ச். பாவிலுவானவரின் ஆசீர்வாதப்பர்சபை ஆச்சிரமத்திலே குருத்துவாபிஷேகஞ் செய்யப்படவிருக்கின்றார். முன்னைநாள் நகரசபை அங்கத்தவரும், பாரியதோர் கப்பற்கம்பெனியின் தலைவருமான இவர் தமது மனைவியார் காலஞ்சென்றசிறிது காலத்தின்பின் இற்றைக்கு ஐந்துவருடங்களின்முன் முன்சொன்ன சந்நியாச ஆச்சிரமத்தில்சேர்ந்து குருப்பட்டத்திக்குப் படித்துவந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரியாயின் சர்வதேச மகாநாடு

லூர்துபதி நூற்றூண்டுவிழாவிலே அத்திருப்பதியின் மிகமுக்கியமான பெரியசம்பவம்ஒன்று நிகழ்ந்திருக்கிறது. அதாவது, சென்ற 13-ந் திகதிமுதல் 17-ந் திகதிவரை நடந்தேறிய மரியாயின் சர்வதேச மகாநாடேயாகும். இது நடைபெற வேண்டுமென்பது பாப்பரசரின் விருப்பமாயிருந்தது. அங்குநடைபெற்ற திருவைபவங்களுக்குத் தமது சொந்தப் பிரதிநிதியாகக் கருதினல்மார்திருச்சங்க தலைவரான கருதினல்ஈயூஜின் திசரூன் ஆண்டவரைஅவர்அனுப்பிவைத்திருந்தார். லூர்துபதிச் சர்வதேச கம்மிற்றியின் தலைவரும் இவரே. மகாநாட்டின் திறப்புவிழாவன்று 12 கருதினல்மாரும், 150 அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் இவரைப் புடைசூழ்ந்துநின்ரூர்கள். பிரான்ஸிய அரசாங்கத்தின் பேரால் இவர் அரசாங்கமந்திரியான எம். பியர் பிவிளிம்லின் அவர்களால் வரவேற்கப்பெற்ரூர். 17-ந் திகதியன்று திருக்கெபிமுன்பாகவுள்ள முற்றவெளியிலிருந்து நகரின்பிரதான வீதிகளினூடாக நடந்தேறிய ரோச்-லைற் சுற்றுப்பிரகாரத்தோடு மகாநாடுநிறைவாயிற்று.

---

### அணுக்குண்டுக்குப்பலியான
## ஜப்பானிய கோவில்

ஜப்பானியதேச நாகாசகிநகரிலே அணுக்குண்டால் தாக்குண்டு அழிவுக்குள்ளான அமலோற்பவநாயகியின் சரித்திர பூர்வமான உரூகாமியகோவிலைத் திரும்பக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் பூர்த்தியடைந்துவிட்டன. தனதுகாலத்திலே இந்தக்கோவில் தூரகிழக்கு நாடுகளில் மிகப்பெரிய கத்தோலிக்ககோவிலாக விளங்கியிருந்தது. 15 லட்சத்து 30 ஆயிரம் மக்களைக்கொண்ட இந்தத் துறைமுகப் பட்டணத்தை 1945-ம் ஆண்டு ஆவணிமாதம் 8-ந் திகதியன்றுகாலை தரைமட்டமாக்கிய அணுக்குண்டால் இந்தக்கோவில பரிநாசமாயிற்று. உரூகாமியகோவில் 12,000 கத்தோலிக்கரைக்கொண்ட ஓர்சமூகத்தின் வழிபாட்டுத் தலமாயிருந்தது. இவர்களெல்லாம் அர்ச். பிரான்சீஸ்சவேரியார் காலத்து ஜப்பானிய ஆதிக்கிறீஸ்துவர்களின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். இவர்களில் சுமார் 8,000 பேர் அணுக்குண்டினல் கொல்லப்பட்டார்கள். அணுக்குண்டு வெடித்தபோது இந்தக் கோவிலில் இருந்த ஒருதொகையான கிறீஸ்துவர்கள் தங்கள் பங்குக்குரவரான வண. நிஷிடாசுவாமியாருடன் கொல்லப்பட்டுப்போனுர்கள். யுத்தத்தின்பின் இந்தக்கோவில் இருந்தவிடத்திலே தற்காலிகமாக ஓர்கோவில் கட்டப்படலாயிற்று. ஆனுல், அதுமுதல் கிறீஸ்துவர்களின்தொகை தீவிரமாக அதிகரித்து வந்தமையாலே இந்தச் சிறிய கோவில் அவர்களின் பாவனைக்குப் போதியதாகாமல் போய்விட்டது. அதனுல், நாகாசகிநகரின் போல் யமாகுச்சி மேற்றிராணியாரைத் தலைவராகக்கொண்ட கம்மிற்றி ஒன்று ஆக்கப்பட்டுத் தேசமுழுவதிலும் புதியகோவிலுக்கென்று நிதிசேகரிக்கப்படலாயிற்று. மேற்றிராணியாண்டவரும் ஐக்கிய அமெரிக்கதேசஞ் சென்று போதியநிதி சேகரித்து வரலாயினர். அதனுல், புதியகோவிலைக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் செய்யப்படலாயின.

---

## இரு ஐரிஷ்கிராமங்களும் குருமாரும்

இரு ஐரிஷ்கிராமங்கள் இரண்டினதும் சனத்தொகை 6,000 பேர்தானுமில்லை. ஆனுல், அயர்லாந்திலும், மற்றும் பிறநாடுகளிலும் தற்சமையம் தொண்டாற்றிவருகின்ற இரு கிராமங்களினதும் சுயபுதல்வர்கள் மத்தியிலுள்ள குருமாரின் தொகையையிட்டு அவைகள் பெருமைபாராட்டிக்கொள்ளுகின்றன. அயர்லாந்திலுள்ள லூகிறியா எனும் கிராமத்தைச்சேர்ந்த வண. டெனிஸ் காஹில் பிறதர் சமீபத்தில் போஸ்றன்நகர றிச்சேட் குஷிங் அதிமேற்றிராணியாரால் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றபோது, அந்தக் கிராமத்தைச்சேர்ந்த குருமார்தொகை 22 பேராயிற்று. இவர்கள் ஐந்து கண்டங்களிலும் தொண்டாற்றிவருகிருர்கள். 2,000 குடிசனங்களையேகொண்ட இந்தக் கிராமத்துக்கு இது ஒருபெருஞ் சாதனையாகும். இந்தக் குருப்பட்டாபிஷேகம் நடைபெற்று ஒருவாரத்துள் அங்கு 2,8(0 குடிசனங்களைக்கொண்ட மிடிஸ்ரன் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்களாய் 2( குருமார் இருந்துவருவதாகக் கண்டறியப்படலாயிற்று. இவர்கள் அயர்லாந்திலும், இங்கிலாந்திலும், ஆஸ்திறேலியாவிலும், ஆபிரிக்காவிலும் தொண்டாற்றிவருகின்ரூர்கள்.

---

### திருச்சபையைத் துன்புறுத்திவரும் கம்யூனிஸ்த
## வடவியெற்னும்

இந்தோசீனுவிலே வடவியெற்னும் நாட்டின் கம்யூனிஸ்த அரசாங்கம் கத்தோலிககதிருச்சபை மட்டிலே அதிகமதிகம் குரூரத்தனமுடையதாகிக்கொண்டு வருகின்றது. கத்தோலிக்க பாடசாலைகளெல்லாம் இற்றைக்குப் பலமாதங்களாக மூடப்பட்டிருக்கின்றன. கத்தோலிக்க கிராமவாசிகள் பெருந்தொகையாகச் சஞ்சரித்துவருகின்ற நாடுபகுதிகளைத் தரிசிப்பதற்கு அனுமதிச்சீட்டுகள் பெறுவதிலே குருமாருக்குள்ளகஷ்டம் அதிகரித்துவருகின்றது. கம்யூனிஸ்த ஹனேய்நகரிலே தொடர்ந்து படிப்பிக்கப்படும் ஞானுபதேசப் பாடவகுப்புகளில் கலந்துகொள்வதற்காகத் திங்கட்கிழமைதோறும் ஆசனக்கோவிலில் ஆயிரக்கணக்கானமக்கள் இடம்கொள்ளாதவகையிலே சமூகமளித்துவந்தார்கள். சமீபகாலம்வரை இந்தவகுப்புகள் புதன், வெள்ளிக்கிழமைகளிலும் நடைபெற்றுவந்தன. ஆனுல், கம்யூனிஸ்த அதிகாரிகள் தற்போது இந்தவகுப்புகளை நிறுத்திவிட்டிருக்கிருர்கள். செஞ்சீன அதிகாரிகளைப் பின்பற்றிவரும் வியெற்னுமிய கம்யூனிஸ்த அதிகாரிகளால் சமீபத்திலே ஹனேய் நகரில் நிகழ்ந்த கூட்டம் ஒன்றிலே சிலமேற்றிராணிமாரையும், மிஷனரிமாரையும் நாட்டின் விருத்தியை எதிர்த்துச்செயலாற்றும் வேவுகாரரெனக் கண்டித்து உக்கிர பேச்சுவார்த்தைகள் நடைபெறலாயின. மிஷனரிமாரோ சமய விஷயங்களில் திருச்சபையின் கட்டளைகளைப் பின்பற்றிநடப்பதாகவும், சமூக, பொருளாதார விஷயங்களில் அரசாங்கத்தின் கட்டளைகளுக்குத் தாங்கள் அமைந்து நடப்பதாகவும் அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்ரூர்கள். ஞானஸ்நான ஆயத்தகாரரைத் திருச்சபையிலிருந்து அப்புறப்படுத்திவிடக் கம்யூனிஸ்த ஆட்சியாளர் சகலவிதமான பிரயத்தனங்களும் செய்தபோதிலும் மனந்திரும்புதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

---

### ஜப்பானிய
## வேதசாட்சிகளின் குன்று

ஜப்பானிலே நாகாசகிநகர துறைமுகத்துக்கு மேலாகத் தோன்றும் பதிந்த தட்டைவடிவமான ஓர்குன்று உலகின் அநேக பகுதிகளிலுள்ள கத்தோலிக்கருக்கு ஓர்புனிதமான பதியாய் இருந்துவருகின்றது. ரற்றேறயாமா என்றும், சிறப்பாக வேதசாட்சிகளின் குன்று என்றும் அறியப்படுகின்ற இதில்தான் 1597-ம் ஆண்டு மாசிமாதம் 5-ந் திகதியன்று ஜப்பானிய முதல் வேதசாட்சிகள் 26 பேரும் சிலுவையில்அறைந்து கொல்லப்பட்டார்கள். இவர்கள் வேதசாட்சிகளான 360-ம் ஆண்டின் ஞாபகார்த்தமாக அதிலே கல்லும், லோகமும்கொண்டு சிலுவையில்அறையுண்டபாவனையான ஆள் பரிமாணமுள்ள உருவங்களை அமைக்கும்வேலை ஆரம்பமாகியிருக்கிறது. 16-ம் நூற்ருண்டின் இறுதியிலே இந்தக் குன்றின்மீது வேதசாட்சிகளாகக் கொலையுண்டவர்களில் பிரான்சீஸ்கன்சபைக் குருமார் ஆறுபேரும், யேசுசபைக்குருமார் மூன்றுபேரும், ஜப்பானியர்களான சாதாரண கத்தோலிக்கர் 17 பேரும் அடங்குவார்கள். அந்தநாளிலே ஜப்பான் முழுவதுக்கும் ஷோகன்—அதாவது யுத்ததலைவனுயிருந்த ஹிடெயோஷி என்பவனுல் இவர்கள் மரணதண்டனை விதிக்கப்பட்டார்கள். இவர்களின் மரணத்தோடு ஜப்பானில் பயங்கர வேதகலாபனை ஆரம்பமாயிற்று. நீரோ சக்கிரவர்த்தி ஆதிரோமான் கத்தோலிக்கரை விரோதித்துநடத்திய குரூர வேதகலாபனையோடு மாத்திரம் அது ஒப்பிடப்படக் கூடியதாகும்.

---

## மைக்கேல் ஆஞ்ஜெலோவின்
## சித்திரத்தை வர்ணிக்கும் தபால்முத்திரை

நிகழும் சர்வதேச பூகர்ப்ப ஆராய்ச்சிவருடத்தின் ஞாபகார்த்தமாக ஐக்கிய அமெரிக்க தேச அரசாங்கம் பாவனைக்கு விடுத்துள்ள தபால்முத்திரைஒன்றிலே வத்திக்கானிலுள்ள தலைசிறந்த பெரிய ஓர்சித்திரவேலைப்பாட்டில் மைக்கேல்ஆஞ்ஜெலோ என்ற கீர்த்திவாய்ந்த சைத்திரிகரால் வடிவெழுதி வர்ணிக்கப்பட்டிருப்பதுபோல மனிதனைச்சிருட்டிக்கும் தேவனின்கரம் காட்சியளிக்கின்றது. ஐக்கிய அமெரிக்கதேசம் கலந்திருக்கின்ற இந்த விஞ்ஞான ஆராய்ச்சியில் காண்பிக்கப்படும் சர்வதேச ஒத்துழைப்பின் ஞாபகமாக மூன்று சதம் பெறுமதியான இந்தத் தபால்முத்திரை சமீபத்திலே சிக்காகோநகரில் முதன்முதலாகப் பாவனைக்கு வெளியிடப்படலாயிற்று.

இந்தத் தபால் முத்திரையின் ஓர்புறமாகக் காணப்படுகின்ற சூரியமண்டலத்தின் பிரதிமையானது காலந்தோறும் நிகழும் சூரியகடமாட்டத்தின் உக்கிரபிரகாசம்ஒன்றைக் காண்பிக்கின்றது. சர்வதேச பூகர்ப்ப ஆராய்ச்சிநடைபெறுகின்ற பதினெட்டு மாதகாலத்திலும் ஆராயப்படும் தோற்றங்களில் இதுவும் ஒன்ருகும். சூரியனுக்கு மேலாகவும், அக்கினிமயமான சூரியப்புயல்களின் ஓர்புகைகமாகவும் "ஆதாமின் சிருட்டிப்பு" என்ற மைக்கேல்ஆஞ்ஜெலோவின் பிரசித்திபெற்ற சித்திரத்தின் ஓர்பகுதி இந்தமுத்திரையிலே காணப்படுகிறது. வத்திக்கானிலுள்ள சிஸ்ரைன் சிற்ருலயமச்சிலே இந்தச் சித்திரம் மத்தியதானம் வகித்திருக்கின்றது. தேவனின் திருப்புசமும், கரமும் வலதுபக்கத்திலே முதல்மனிதனுன ஆதாமுக்கு உயிர்அளிக்குமாறு அவனது உயிரற்ற அசேட்டமான உடலை ஏறக்குறையத் தொடப்போகும் பாவனைப் பிரதிமை இந்தமுத்திரையிலே காண்பிக்கப்பட்டிருக்கிறது. கருமையும், செம்மைகலந்த மஞ்சளுமாக இருவர்ணங்களிலே முதலில் 12 கோடி முத்திரைகள் அடிக்கப்படலாயின.

1475-ம் ஆண்டுமுதல் 1564-ம் ஆண்டுவரை சீவித்திருந்த மைக்கேல்ஆஞ்ஜெலோ 2-வது ஜூலியஸ் பாப்பானவர்கொடுத்த அதிகாரத்தின்பேரிலே பிரபல சிஸ்ரைன் சிற்ருலயத்தில் 1508-ம் ஆண்டுக்கும், 1512-ம் ஆண்டுக்குமிடையில் உலகப்பிரசித்திபெற்ற சித்திரங்களைத் தீட்டலாயினர். சிருட்டிப்பின் சம்பவத்தை வர்ணிக்கும்காட்சிகளை மல்லார்ந்துகிடந்தபடியே அவர் சித்திரிக்கலாயினர். வத்திக்கானின் சித்திரங்களில் ஏதாவது ஒன்று அமெரிக்க தபால்முத்திரை ஒன்றில் பிரதிமையாக அமைந்திருப்பது இதுவே முதல்முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐப்பசிமாதம்

**பொதுக்கருத்து:** பொது உணவு விடுதிகளிலும், தங்குமிடங்களிலும் தொழில்ஆற்றுகிறவர்களின் ஆன்ம இரட்சணியத்திற்காக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:** சுதேசகுருமாரின் அபிவிர்த்திக்காகப் பாப்பரசர் ஏற்படுத்தியுள்ள அர்ச். இராயப்பர் சபைக்குச் சகலவிசுவாசிகளும் ஆக்கமிகுந்த ஆதரவு அளிக்கும்படியாக மன்ருடிக்கொள்வது.

சத்திய வேத
# பாதுகாவலன்
1958-ம் ஆண்டு
ஐப்பசிமாதம் 2-ந் திகதி

## திருச்செபமாலை ஒன்றே

அமைதிகலைந்து, சமாதானம் குலைந்து அலைகடல்போன்று உலகம் கிலைகலங்கிக்கொண்டிருக்கின்ற ஓர்சந்தர்ப்பத்திலே பரிசுத்தசெபமாலைநாயகிக்கு அர்ப்பணஞ்செய்யப்பெற்ற மற்றுமோர் ஐப்பசிமாசத்தின் ஆரம்பத்தில் இன்றுநாம் இருக்கின்ரேம். செபமாலைஎனப்படும் திருமாலையானது அர்ச். சாமிநாதர் மூலமாகத் தமதுஞானமக்களுக்குத் தேவதாயார்அருளத்திருவுளங்கனிந்த ஓர்அரியகொடையாகும். அது தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும், குடும்பங்களுக்கும், சனசாகியங்களுக்கும், திருச்சபைக்குமே கிரந்தரமும், நிச்சயமாக வெற்றியளிப்பதுமான ஓர்இணையற்ற பாதுகாப்புக்கேடயமாகும். கடந்தகாலத்திலே அஃது பலிதமான பலமிக்க ஓர்ஞானஆயுதமென்பது சாதனையிலே நிரூபிக்கப்பட்டதொன்ருகும். அவ்வாறே நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் அது இருந்துவருமென்று எடுத்துக்கூறவேண்டியதில்லை.

செபமாலையானது மரியன்னைக்கு மிகமிகஅருமையானது. ஏனெனில், அவருடையஞானமக்களை அவருக்கு மிகவும்அண்மையிலே கொண்டுசெல்லும் ஓர் அரியசாதனமாய் அது விளங்குகின்றது. லூர்துபதியிலே அர்ச். பேர்னதெத்அம்மாளுக்கும், பாத்திமாபதியிலே லூஸியா, பிரான்சிஸ், ஜாசிந்தாஎனும் பிள்ளைகள் மூவருக்கும் காட்சியளித்த ஒவ்வோர்முறையும் தமதுகரங்களில் ஓர்செபமாலையை—தங்கச்சங்கிலி ஒன்றிலே இசைக்கப்பட்ட வெண்பனிபோலும் வெண்மையான மணிகளைக்கொண்ட ஓர்செபமாலையைத் தாங்கியிருந்தார் கண்ணீர்க்கணவாய் எனப்படும் இந்தஉலகவாழ்க்கையாகிய சீவிய போராட்டத்திலே செபமாலை கொண்டு நம்மைஆயுதபாணிகள் ஆக்கிக்கொள்ளவேண்டுமென்று அவர்ஆசிக்கின்ருர். நம்மால் இயன்றமட்டும் அதைச்செபிக்க வேண்டுமென்று அவர் ஆசிக்கின்ருர்.

செபமாலையானது மரியன்னையின் மாசற்றஇருதயத்தோடு அத்துணைநெருங்கிய தொடர்புடையது. ஏனெனில், நாம் அதைச் செபிக்கும்பொழுது, தேவகுமாரனின் திருமனுஷாவதாரத்திலிருந்து அவர் மோட்சாரோகணமானதுவரை—தேவதாயார்தாமே மோட்சாரோபணமாகிப் பரலோகத்தில் திருமுடிசூட்டப்பட்டதுவரை அவருடையதிருமகனை திவ்வியயேசுவோடும், அவரோடும் உடன்செல்லுகிரேம். பதினைந்துகாரணிக்கங்களிலும் அடங்கியுள்ள பதினைந்து தேவஇரகசியங்களையும் நாம்தியானிக்கும்போதே அங்ஙனம் ஞானவிதமாக உடன்செல்லுகிரேம். நாம் செபமாலை செபிக்கும் பொழுது கிலுவையில் அறையுண்ட அவருடையதிருக்குமாரனின் திருச்சாயலை முத்தமிடுகிரேம். பரிசுத்த பரமதிரீத்துவத்தை மகிமைப்படுத்துகிரேம். திவ்வியயேசுவுடன் நமக்குள்ள ஞானஐக்கியத்தை உறுதிப்படுத்துகிரேம்.

1917-ம்ஆண்டு ஐப்பசிமாதம் 13-ந்திகதியன்று பாத்திமாபதியில் மூன்றுபிள்ளைகளுக்கும்கடைசிமுறையாகமாதா காட்சியளித்தார். அப்பொழுது அவ்விடம குழுமியிருந்த 70,000பேருக்கு மேற்பட்ட மாபெரும்சனக்குழாமின்முன்பாகச் சூரியபெரும்புதுமை நிகழலாயிற்று. அந்தக்காட்சியின்போது லூஸியா தேவதாயாரைநோக்கி: "அம்மா, நீங்கள் யார்? நீங்கள்என்னிடம் கேட்பதென்ன?" என்று வினவியபோது, அந்தப்பரலோக தரிசகியானவர் அதற்குவிடையாக: "செபமாலைநாயகி நாமே; தங்கள் சீவியத்தைத்திருத்தித் தங்களுடையபாவங்களுக்கு மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று விசுவாசிகளை நாம் எச்சரிக்கவந்திருக்கிரேம்; செபமாலைசெபிக்கும்படியும், தங்கள்சீவியநடபடிகளைத் திருத்தி, கட்டிக்கொண்டபாவத்துக்காகத் தபஞ்செய்யும்படியும் அவர்களைக் கேட்கவந்திருக்கிரேம்"எனக் கூறலாயினர்.

ஆம், நாம் செபமாலைசெபிக்கவேண்டும். ஏனெனில், அவ்வாறு செபிக்கவேண்டுமென்று அன்னை மரியதாயார் ஆசிக்கின்ருர். செபமாலைப்படையணியின் பிரஸ்தாபம்பெற்ற தலைவரான வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமிகளின் தரிசனை இன்னும் நமதுமனக்கண்முன்பாகக் காட்சியளிக்கின்றது. செபமாலை செபித்துவருவதாக—குடும்பசெபமாலை செபித்துவருவதாக நாம்கொடுத்தஉறுதிமொழியானது இன்றுமேநமது கடமையை உணர்த்திக்கொண்டிருக்கிறது. குடும்பசெபமாலையைத் தினமும்தவருது செபித்துவருமாறு சுவாமியவர்கள் ஆர்வத்துடன்கூறிய நன்மதிகளோ குன்றுகள், பள்ளத்தாக்குகள், நகர்கள், கிராமங்களிலெல்லாம் இன்றுமே எதிரொலி செய்துகொண்டிருக்கின்றன. தேவதாயார் தமது பரிந்துபேசுகையினுல் சர்வேசுரனிடத்தில் சர்வவல்லமையுடையவரென்று அவர் கூறிய பொன்மொழிகள் நமது செவிகளில் வெண்கலமணியோசைபோன்று இன்னுமே தொனித்துக்கொண்டிருக்கின்றன. யுத்தகுமுறல்களாலே கொந்தளித்துக்கொண்டிருக்கின்ற இன்றைய உலகுக்குச் சமாதானத்தையும், சாந்தியையும் கொண்டுவரக்கூடியது திருச்செபமாலையொன்றேயன்றோ.

# சுதேச வர்த்தமானம்

### அதிவண. பீற்றர்பிள்ளைசுவாமியார்

லண்டனிலிருந்து சென்ற25-ந்திகதி வியாழக்கிழமைகிடைத்துள்ள தந்திச் செய்தி பினவருமாறு தெரிவித்திருக்கிறது. "தெற்குலண்டனிலுள்ள சென்ஜேம்ஸ்ஆஸ்பத்திரியில் இருந்துவருகின்ற அதிவண. பீற்றர்பிள்ளை சுவாமியவர்கள் வருகிறசெவ்வாய்க்கிழமை உடலின் உள்நோய்ஒன்று சம்பந்தமாய்ச் சத்திரசிகிச்சைக் குள்ளாவரென எதிர்பார்க்கப்படுகிறது. அவர் 'முற்றுமேசௌகரிய' மாகவும், சந்துஷ்டியாகவும் இருந்துவருகின்ருர். சத்திரசிகிச்சையின் பின்னர் பூரண ஆரோக்கியத்தை எதிர்பார்த்திருக்க முடியுமெனத் தெரியவருகிறது" என்பதே. சுவாமிகளுக்குச் செய்யப்பெற்ற சத்திரவைத்தியம் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறதென்றும், அதையிட்டுச் சத்திரவைத்தியர் மிக மகிழ்ச்சியுற்ருரென்றும் நேற்றைத் தினம் கேபிள் தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது.

### முதற்பூசைகளும் வரவேற்பும்

கண்டியிலே அம்பிற்றியாவிலுள்ள லங்காமாதா குருமடத்திலே சமீபத்தில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றவரும, யாழ்ப்பாணம், பரிசுத்த புதுமைமாதா கோவிலைச் சேர்ந்தவருமான வண. பனிமயம் லோப்பையா சுவாமியவர்கள் குருப்பட்டம் பெற்றபின் முதன்முதலாக நாளை 3-ந் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து, அன்று சாயந்தரம் 4-30 மணிக்குப் பரிசுத்த புதுமைமாதா கோவிலைச் சேர்ந்த மக்களால் வரவேற்று உபசரிக்கப்படுவார். மறுநாளாகிய 4-ந் திகதி சனிக்கிழமைகாலை 7 மணிக்கு அதேகோவிலில் முதன்முறையாகப் பெரியபாடற்பூசை நிறைவேற்றுவார். 5-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 7 மணிக்குத் தமது பெற்ருேரின் வாசஸ்தலமாகிய சாவகச்சேரி, அர்ச். லிகோறியார் கோவிலில் முதன்முறையாக ஓர்பாடற்பூசை நிறைவேற்றுவார். அன்று பிற்பகல் 4 மணிக்கு அங்குள்ள "புனிதவளனுர் பொன்னகம்" என்ற அவர்பெற்ருேரின் இல்லத்திலே அவருக்கு ஓர்வரவேற்பு விழா நடந்தேறுமென அறிகின்ரேம்.

### வெள்ளச்சேதமும் நீர்ப்பாசனமும்

அடுத்துநிகழும் ஐப்பசிமாதம்1-ந் திகதியுடன் ஆரம்பமாகவிருக்கும் புதிய அரசிறைவருடத்திலே சென்றமார்கழியில்உண்டான வெள்ளச்சேதங்களைத் திருத்துவதற்கே அதிகம்முக்கியத்துவம்அளிக்க நீர்ப்பாசனபகுதிஅதிகாரிகள் தீர்மானித்துள்ளார்கள். வெள்ளத்தினுல நீர்ப்பாசனதிட்டங்களுக்கு ஏற்பட்ட அழிவுசேதங்களில் ஏறக்குறைய 50விகிதமான திருத்தவேலைகளையே நீர்ப்பாசனபகுதி இதுவரை பூர்த்திசெய்துள்ளது.

### மின்சாரகம்பத்தில் மோதியகார்

யாழ்ப்பாணப் பெருந்தெருவிலே ஆரும்குறுக்குத்தெருச்சந்தியில் சென்றஞாயிற்றுக்கிழமை மத்தியானவேளையின்பின் நடைபெற்ற கார்விபத்துஒன்ருல் நகர்முழுவதும் மிகுந்தபரபரப்புஏற்படலாயிற்று. டி. இம்மனுவேல்என்ற வாலிபர்செலுத்திச்சென்ற கார்ஒன்று சென்றவேகத்திலே அங்கு நிறுவிநின்ற மின்சாரகம்பத்தில்மோதியதால் அவர் கடூரகாயமடைந்து அபாயகரமானநிலைமைக்குள்ளாயினுர். காரினுள் அகப்பட்டுக்கொண்ட அவர் அதனுளிருந்து மிகுந்தகஷ்டத்துடன் வெளியில்எடுக்கப்பட்டு உடனேதானே பெரியஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அந்தக்காரில் பிரயாணஞ்செய்த ஆர். நல்லநாதன்என்பவருக்கும் கடினகாயம் ஏற்பட்டது. மின்சாரகம்பமும் மேலே முறிந்து, ஓர்புறமாகச்சாய்ந்துகொண்டது. முன்னுல் சென்ற ஓர்மோட்டர்சைக்கிளை முந்துவதற்காகக் காரைவிரைவாகச் செலுத்தியபோதே இந்தவிபத்து நிகழ்ந்ததென்று சொல்லப்படுகிறது. காயமடைந்து அபாயகரமானநிலைமையில் இருந்துவந்த இருவரும் தற்போது அபாயநிலையிலிருந்து தப்பிவிட்டதாகத் தெரியவருகிறது.

### சைக்கிள்ஓட்டப் போட்டிகளின்முடிவு

முன்னர்தெரிவித்திருந்த பிரகாரம் சென்றஞாயிற்றுக்கிழமைகாலை யாழ்ப்பாணத்தில் 55மைல்தூரமான சைக்கிள்ஓட்டப்போட்டி விமரிசையாக நடந்தேறியது. காலை7-35மணிக்குப் போட்டி ஆரம்பமாயிற்று. போட்டியிலேகலந்துகொண்டவர்களில் கண்டியைச்சேர்ந்த திரு. ஏ. நவரத்ன மூன்றுமணித்தியாலத்தில் பந்தயஓட்டத்தைமுடித்து 1-ம்இடத்தையும், கண்டியைச்சேர்ந்த திரு. பி. மாயாகடுவா என்பவர் 2-ம்இடத்தையும், குருநகரைச்சேர்ந்த திரு எஸ். பிரான்சீஸ் 3-ம்இடத்தையும்வகித்தனர். வெற்றிபெற்றவர்களுக்கு யாழ்ப்பாணமேயர் திரு. அல்பிறெட் துரையப்பாஅவர்கள் பரிசில்களைவழங்கினர். கணேசலிங்கம் வெற்றிக்கிண்ணத்தை மூன்ரும்இடத்தைவகித்த திரு. எஸ். பிரான்சீஸ் பெற்றுக்கொண்டார். பாடசாலைமாணவர்களுக்கென நடத்தப்பட்ட 10மைல் சைக்கிள்ஓட்டப்போட்டியிலே 1-ம்இடத்தை ஸ்ரான்லி ஆசிரியர் மத்தியகல்லூரியைச்சேர்ந்த ஆர். கனகசபாபதியும, 2-ம், 3-ம்இடங்களை ஹாட்லிக்கல்லூரியைச்சேர்ந்த பி. ரி. மகாதேவனும், கே. வேலுப்பிள்ளையும் பெற்ருர்கள். போட்டிஆரம்பமாகி முடிவடைந்தஇடமாகிய யாழ்ப்பாணப் பொலிஸ்மைதானத்திலும், அதுநடைபெற்ற பாதையின்இருமருங்கிலும் பெருந்தொகையான மக்கள் குழுமியிருந்து ஆர்ப்பரித்து கோஷஞ்செய்து நின்ருர்கள்.

### சீவபரியந்த சிறைக்கைதிகள்

மரணதண்டனை நிறுத்தப்பட்டதன் விளைவாக இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளிலே 'ஆயுள்காலசிறைத்தண்டனை பெற்றவர்களாய்த் தற்போது 289 கைதிகள் இருந்துவருகின்ருர்கள். இவர்களிலே 1955-ம் ஆண்டில் 98 பேரும், 1956-ம்ஆண்டில் 95பேரும், சென்ற 1957-ம்ஆண்டில் 96பேரும் சிறைச்சாலைகளில் அனுமதிக்கப்பட்டார்கள். சிறைச்சாலைகளின் தலைவரான திரு. வி. என். பிள்ளை அவர்கள் சென்றவெள்ளிக்கிழமை வெளியிட்ட தமது 1957-ம்ஆண்டிற்கான நிர்வாக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்திருக்கின்ருர்.

### தபாற்கந்தோர் மாதிரிப்பத்திரங்கள்

வடமாகாணத்திலும், கிழ்மாகாணத்திலும் வாழுகின்றமக்களின் பாவனைக்கென்று தபாற்கந்தோர் மாதிரிப்பத்திரங்களெல்லாம் வருங்காலத்தில் சிங்களத்திலும், தமிழிலும் அச்சிடப்படும். சிங்களத்திலும், தமிழிலும் அச்சிடப்பட்ட இந்தமாதிரிப்பத்திரங்கள் தோட்டப்பகுதிகளிலே இந்தியதோட்டத் தொழிலாளரின் நன்மைக்கென்றும் பாவிக்கப்படும்போல் இருக்கிறது. ஏனையபகுதிகளிலே இந்தப்பத்திரங்கள் சிங்களத்தில்மாத்திரம் இருந்துவரும். வடமாகாணத்திலும், கீழ்மாகாணத்திலும் சிங்களமும், தமிழும் உபயோகிக்க இடமளிக்கும்படியாக நியாயமான தமிழ்மொழிஉபயோக மசோதாவின்கீழ் பாராளுமன்றத்திலே ஓர்புதியசட்டவிதியைப் பிரதமர் சமீபத்திலே கொண்டுவருவாரென அரசாங்க அதிகாரிஒருவர் தெரிவித்திருக்கின்ருர். தமிழ்மொழிஉபயோகமசோதாவின்கீழ் கொண்டுவரப்படவிருக்கும் முதலாவது சட்டவிதிஇதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அகதிகளுக்குநிலம்

சென்றவகுப்புக்கலவரத்தின்போது பொருள்நஷ்டம்அடைந்து வசிக்கஇடமின்றிக் கஷ்டப்பட்டு அந்தரித்து வவுனியாப்பகுதியை அடைந்து அங்கு வசித்துவரும் அகதிகள்சகலருக்குமே சாதி, சமய, இனவேறுபாடுகாட்டாது காணிகள் வழங்கும்பொருட்டு வவுனியாக்கச்சேரியில் காணிக்கச்சேரி ஒன்று நடைபெற்றிருக்கிறது. அகதிகள் தற்சமையம்வசித்துவரும் இடங்களிலே இடவசதிக்கேற்றபடி வசிக்க இடங்கொடுக்கும் நோக்கத்துடனே இந்தக்காணிக்கச்சேரி நடைபெற்றது.

### செஞ்சிலுவைச் சங்ககிளை

யாழ்ப்பாண நகரமண்டபத்திலே சென்றபுதன்கிழமைநடைபெற்ற இலங்கைச் செஞ்சிலுவைச்சங்ககூட்டத்திலே யாழ்ப்பாணத்திலும் இச்சங்ககிளைஒன்று ஸ்தாபிக்கப்படலாயிற்று. அத்தருணம் செஞ்சிலுவைச்சங்கத்தைச்சேர்ந்த பிரபலஸ்தர்கள்பலரும் சமுகமளித்திருந்தார்கள். அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகந்தாஅவர்கள் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசியபோது: இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தின் கிளைஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும் இத்தினம் முக்கியமானதாகும்; உலகெங்கும் பரவியுள்ள இச்சங்கம் பிரதிபலன்கருதாது சேவையைமட்டும் குறிக்கோளாகக்கொண்டு கடமையாற்றுவதாகும்; கடந்தவெள்ளப்பிரவாகத்தின்போதும், சமூகக்கலவரங்களின்போதும் செஞ்சிலுவைச்சங்கம் ஆற்றியசேவைகளை அகதிகள்போற்றிப் புகழ்ந்து நன்றிபாராட்டியதை நான்நேரில் பார்த்திருக்கிறேன்எனக் கூறலாயினர்.

### வீதிப்போக்குவரத்து ஒழுங்கு

யாழ்ப்பாண அரசினர்ஆஸ்பத்திரியிலே வெளிநோயாளர் மருந்துச்சாலைக்கு முன்பாகவுள்ள வீதியின் போக்குவரத்து ஒழுங்குகள் கொழும்புநகரை நினைவூட்டும்வகையில் மாற்றியமைக்கப் பட்டிருக்கின்றன. வாகனப்போக்குவரத்து நெருக்கடிநிறைந்த இடமாகிய அப்பகுதியில் வாகனங்கள் ஒருபக்கமாகப்போகவும், மற்றோர்பக்கமாகத் திரும்பிவரவும் இடைநடுவிலே மோட்டர்வாகனங்களை நிறுத்தவும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. பொலிசாரின் இந்தஒழுங்கு யாழ்ப்பாணத்தில் ஓர்முன்மாதிரியான சூழ்நிலையை ஏற்படுத்துவதுடன் அங்குகாணப்பட்ட நடைபாதை வியாபாரிகளையும் இடம்பெயரச்செய்துவிட்டது.

### சிகறேற்புகையிலைச் சங்கங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள சிகறெற்புகையிலைச்சங்கங்கள் அரசாங்கத்தினிடமிருந்து பெற்றுக்கொண்ட மத்தியகாலக்கடனிலே இவ்வருடத் தவணைப்பணத்தைத் திருப்பிக்கொடுக்க ஒருவருடத்தவணை கூட்டித்தருமாறு அவற்றின்சமாசம் செய்தவேண்டுகோளுக்கு விவசாயப்பகுதியின் நிரந்தரக்காரியதரிசி உடன்பட்டிருக்கின்றார். சென்ற மார்கழியில் ஏற்பட்டவெள்ளப்பெருக்கினால் சங்கங்கள் அதிகலாபம்பெற முடியாமற்போனமையே உரியகாலத்தில் கடனைத்திரும்பக்கொடுக்க முடியாமற்போனதுக்குக் காரணமாகும்.

### காலநிலை

இடையிடையே மழைக்கோலம் அதிகமாகக் காணப்படினும் வெயிலின்அகோரம் குறைந்தபாடில்லை. இடையிடையே காற்று உரமாகவீசிக்கொண்டிருக்கிறது. சென்றவெள்ளிக்கிழமை குடாநாட்டின் பலவிடங்களிலும் ஒருபாட்டம் நல்லமழைபெய்ததால் கமக்காரர் வயல்களை உழுவதிலும், நெல்விதைப்பதிலும் ஊக்கமாக ஈடுபட்டிருக்கின்றனர் ஆனால், பலவிடங்களில் சிறுதூற்றலுடன் மழைநின்றுவிட்டதால் வரட்சிஅதிகரித்து, வயல்வேலைகளும் நடைபெறுதிருக்கின்றன.

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

**பரிசுத்த வியாகுலமாதா திருநாள் :**

ஞாயிறுவாரம். மாலைநேரம். பங்குத்தேவாலயம் பெயர்கொண்ட பரிசுத்த வியாகுலமாதா திருநாள். இதனைக் கொண்டாடும்படிகூடினர் வியாகுலத்தாயின் பக்திச்சபையினர். சபைக்குரிய சின்னங்களுடனும், கொடியுடனும் காட்சியளித்தனர். செபமாலைஓதினர். பிரார்த்தனை முடிந்ததும பக்திச்சபையினர் தாங்கிச்செல்ல இதோ! வியாகுலஅன்னை ஆலயவீதிவழியே பவனிவரலாயினார். பங்குக்கிறீஸ்துவர்கள் தங்கள்கட்டளைக்குரவருடன் செபங்களாலும், பாடல்களாலும் அன்னையை வாழ்த்தி வலம்வந்தனர். திருச்சுரூபம் ஆலயத்தைஅடைந்ததும கட்டளைக்குரவரால்மாலைஆராதனைபாடித்தேவநற்கருணைஆசிர்வாதம் அருளப்பட்டது. பின்னர்வியாகுலத்தாயின் திருச்சுரூபஆசீர்வாதம்பெற்று யாவரும்தத்தம் இல்லம் மீண்டனர். மங்கலகரமாகப் 15-9-58 திங்கள்விடிந்தது. ஆலயமணிகள் ஆர்ப்பரித்தன. பங்குக்கிறீஸ்துவர்களும், வியாகுலமாதா பக்திச்சபையினரும் குழுமியிருக்கக் கட்டளைக்குரவர் பாடற்பூசைநிறைவேற்றி "வியாகுலங்கள்"என்றதலைப்பின்கீழ் சிறந்ததோர்பிரசங்கமும்செய்தனர்.

பிற்பகல்6-30மணிக்குப்பங்குக்கிறீஸ்துவர்கள் ஆலயத்தில் திரும்பவும்கூடினர். செபமாலைப் பாட்டுப்பிரார்த்தனைபின்பின் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. எல்லோரும் தங்கள் பாதுகாவலாகிய வியாகுலத்தாயின் திருச்சுரூபத்தண்டை தங்கள்வியாகுலங்களை ஒப்படைத்து ஆசீர் இரந்து மகிழ்வோடு திரும்பினர். இத்திருநாளைப் பக்திச்சிறப்புடன் கொண்டாடிய வியாகுலமாதா பக்திச்சபையினர்க்கும், கட்டளைக்குரவனுக்கும் பங்குக்கிறீஸ்துவர்கள்சார்பில் நன்றிதெரிவிக்கின்றேன்.

பங்குக்கிறீஸ்துவன்

---

சங். மரியதாயாரின்

## பிரிவுஉபசார வைபவம்

கடந்தபத்துஆண்டுகளாகக் கொழும்புத்துறை, சஞ்சூசையப்பர் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியின் உபஅதிபராகவும், கொழும்புத்துறைப் பழையமாணவர் சங்க உபதலைவராகவும் சிறப்புறக்கடமையாற்றிச் சமீபத்தில் இளவாலைக் கன்னியர்மடத்தலைவியாகப் பதவிபெற்றுச்சென்ற சங். மரியதாயார் அவர்களுக்குக் கொழும்புத்துறைப் பழையமாணவர்சங்க அங்கத்தவர்களால் சென்ற 20-9-58சனிக்கிழமை பிற்பகல் இளவாலைக் கன்னியர்மடத்தில் அதிவிமரிசையாக ஓர்பிரிவுஉபசாரம் நிகழ்த்தப்படலாயிற்று.

இவ்வைபவத்திற்கு யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து பெருந்தொகையான ஆசிரியர்கள் பழையமாணவர்சங்கதலைவர் வண. சுவாமி வ. தியோகுப்பிள்ளை அவர்களதும், உபதலைவர் திரு. ஏ. ஞானப்பிரகாசம் பத்திராசிரியர்அவர்களதும் தலைமையில் பஸ்வண்டிமூலம் இளவாலைக்குச்சென்று, அங்குகுழுமியிருந்த ஏனையஆசிரியர்களுடன்சேர்ந்து, கன்னியர்மடமண்டபத்தில் சங். தாயாரைச்சந்தித்தனர்.

அவ்வேளை பாஷையூர்ப்பாடசாலை ஆசிரியை செல்வி ஞா. பிறுன்சிஸ்கா அவர்கள் முதலில்சொற்பொழிவாற்றி ஆசிரியர்கள்பேரால் அன்பளிப்புவழங்கினார். அவரைத்தொடர்ந்து கொழும்புத்துறைச் சாதனபாடசாலைஆசிரியர் திரு. ஏபிரகாம்அவர்கள்பேசினார். அதன்மேல் வண. அதிபர்சுவாமியவர்கள் கல்லூரிஅதிபர் என்றவகையிலும், பழையமாணவர்சங்கதலைவர் என்றவகையிலும் சங். தாயார்மாட்டுத் தமக்குள்ளநன்றிக்கடனை எடுத்துக்காட்டி, அவர்களது சேவையைப் பாராட்டினார். ஈற்றில், சங். மரியதாயார்எழுந்து தம்மாணவர்களான ஆசிரியரும், விசேஷமாகத் தமதுமாணவரல்லாத பழையமாணவர்களும் பெருந்தொகையாகத்திரண்டுவந்து, நன்றிகூறிப் பிரிவுஉபசாரம் நடத்தியதற்காக நன்றிதெரிவித்து, ஆசிரியர்கள்கஷ்டங்கள்நிறைந்த வருங்காலத்தில் திருச்சபைக்குச்சிறந்த தொண்டாற்றுவதைக் காண்பதே தமக்குப்பெருமையும், மகிழ்வும் தருவதாகும் எனக்கூறிநின்றார். ஈற்றில், காரியதரிசி திரு. ப. அருளானந்தம் ஆசிரியர்அவர்கள் இத்தருணத்தைக்கொடுத்த தாயாரவர்களுக்கும், சமுகம்கொடுத்த ஆசிரியர்களுக்கும் சங்கசார்பில் நன்றிகூறினார்.

அதன்பின்னர் சங். தாயாரவர்களால் மிகச்சிறந்தவகையில் சம்பிரமமான பூங்காவிருந்துஒன்று நடத்தப்பட்டது. விருந்துமுடிவில் பாதுகாவலன் பத்திராசிரியர் திரு. ஏ. ஞானப்பிரகாசம் அவர்களால் விருந்துபசாரணைக்கு நன்றிகூறும்முகமாக அரிய சொற்பொழிவு ஆற்றப்பட்டது. இத்துடன்பிரியாவிடை நிகழ்ச்சி இனிது நிறைவேறிற்று.

---

## கனடாவும் உத்தியோக மொழிகளும்

முன்னைநாள் உதவிநீதிமந்திரியும், சாவகச்சேரிப் பிரதிநிதியுமான திரு. வி. குமாரசாமிஅவர்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டுச் சென்றசனிக்கிழமை மறுபடியும் கொழும்புவந்து சேரலாயினர். தமதுபிரயாணவிஷயமாய் அவர்பேசியபோது: நான் லண்டன்நகரில் தங்கியிருந்தபோது, பிரித்தானியபாராளுமன்ற எதிர்க்கட்சிஉபதலைவர், தொழிற்கட்சிப் பிரதமகொறடாஉட்பட எம். பி. கள் பலரையும் சந்தித்து இலங்கையின் இன்றையஅரசியல்நிலைமைபற்றிச் சம்பாஷித்தேன்; சாம்பிராச்சிய உறவுக்காரியாலயத்தில் கடமையாற்றும் அதிகாரிகளுக்குத் தானும் இலங்கையில் தமிழ் எம். பி. கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்என்பதுதெரியாது; தமிழ் எம். பி. கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டதும் அவர்கள் பெரிதும்ஆச்சரிய மடைந்தார்கள்; வாஷிங்ரன்நகரிலே தங்கியிருந்தபோது, அமெரிக்கஅரசாங்கபகுதி உயர்தரஅதிகாரிகளைச் சந்தித்து, இலங்கையின் உண்மையானநிலைமைகளை எடுத்துக்கூறித் தமிழர்களுக்கு நீதியும், நியாயமும் கிடைக்க உதவிசெய்யும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டேன்; ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்திலுள்ள நிரந்தரபிரதிநிதிகள் பலரைச்சந்தித்தும் இலங்கையின்நிலைமைகளை எடுத்துக்கூறினேன்; கனடாவுக்குச் சென்றிருந்தபோது, அந்நாட்டின் மொழிக்கொள்கைபற்றி விரிவாக ஆராய்ந்தேன்; ஆங்கில, பிரான்ஸிய மொழிகள்இரண்டும் அங்கே உத்தியோகமொழிகளாய் இருக்கின்றன; கனடாவின் முன்மாதிரிகையை அதிகம் சுலபமாக இலங்கை பின்பற்றலாம் என்பனவாகக் கூறலாயினர்.

---

● றொக்கெற்எனப்படும் ஆகாயபாணங்கள் குறைந்தபட்சம் கி. பி. 232-ம்ஆண்டுமுதல் அறியப்பட்டிருந்தபோதிலும் விஞ்ஞானமுறையான முதலாவதுறொக்கெற் 1909-ம்ஆண்டுதான் பரிசோதனையில்கண்டுபிடிக்கப்படலாயிற்று. அப்போது ஐக்கிய அமெரிக்கதேச பிரகிருதிசாஸ்திரவிற்பன்னரான றொபேட் கொடாட்என்பவரே ஆகாயத்தில் அதிகம்உயரத்துக்குச் செல்லக்கூடிய றொக்கெற்றுகளைச்செய்து பரிசோதனை நடத்தி வெற்றிபெறலாயினர்.

ஆசிரியர்களின்

## ஞானவொடுக்கம்

இம்மாதம் 22-ந் திகதி புதன்கிழமை பின்னேரந்தொடக்கம், 26-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலைவரைக்கும் மருதமடுத்திருப்பதியில் ஒருஞானவொடுக்கம் நடைபெறும்.

இதிற்பங்குபற்ற விரும்பும்ஆசிரியர்கள் நமக்குக் கூடியசீக்கிரம் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

PHILIP PONNIAH,
Gen. Manager, R. C. Schools
Jaffna, 1-10-58.

---

## பச்சை உத்தரீயம்

சிலகாலத்துக்குமுன் ஓர்சைவமங்கையிடமிருந்து மேல்வரும் கடிதம் எனக்குக்கிடைத்தது. இதனைத்தங்கள் வாசகர்கள்பலரினதும் நன்மையின்பொருட்டுப் பிரசுரஞ்செய்யும்படி வேண்டுகிறேன்.

"சங்கைக்கும், அன்புக்குமுரிய சகோதரரே! ஆழ்ந்தநன்றி உணர்ச்சியுடன் இக்கடிதத்தைத் தமக்கு வரைகிறேன். அநேக மாதங்களாக அடுத்தடுத்துவருகிறவாந்திநோயால் நான்பீடிக்கப்பட்டிருந்தேன். இந்தியாவில் படிப்பை முடித்துக்கொண்டு இங்கு திரும்பியபொழுதே இந்த நோய்உண்டானது. அதிகம்பேர்பெற்றவைத்தியர்கள்தானும் என்னைக்குணப்படுத்தும் வகையறியாதவர்கள்போல் திகைத்தனர். அபாயகரமான நிலையில் என் தாயார்என்னைக் கொழும்பு, அரசினர்பெரியஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார். அதற்கிடையில் என்னுடைய தாயார் படிப்பிக்கும் அதேகலாசாலையிலேயே படிப்பிக்கும் தமது மருமகன் எனக்குப் பச்சைஉத்தரீயம் ஒன்றைஅனுப்பி அதை அணிந்துகொள்ளும்படி சிபாரிசு செய்தார். நாங்கள் நல்லஇந்துக்கள். ஆயினும், தேவஒத்தாசையில் எங்களுக்குநம்பிக்கைஉண்டு. அடிக்கடிநாங்கள் கொச்சிக்கடை, அர்ச். அந்தோனியார் கோவிலுக்கும், பொறளை, சதாசகாயமாதா கோவிலுக்கும் போவதுவழக்கம்.

விசுவாசத்தோடு அந்தஉத்தரீயத்தை அணிந்து, தேவஉதவியை இரந்துகேட்கும் சிறுசெபம்ஒன்றையும் ஒருநாளில் பலமுறை சொல்லிவந்தேன். நான்சீக்கிரத்தில் சுகம்அடைந்தது உண்மையாகவே ஆச்சரியமாகும். தேவனுக்குத் தோத்திரம்! இப்பொழுது நற்சுகதேகியாய் இருக்கின்றேன்.

தாம்விரும்பினால் இந்தச்செய்தியைப் பரப்பலாம். ஆனால், பெயர்களை வெளியிடவேண்டாம்.

தங்கள் உண்மையுள்ள
ஓர் இந்துமங்கை.

**குறிப்பு:** பச்சைஉத்தரீயத்தையும், அதைப்பற்றிய விபரத்தைக்கொண்ட துண்டுப்பிரசுரத்தையும் பெற்றுக்கொள்ள விரும்புவோர் விலாசமிட்டு, முத்திரையிடப்பெற்ற கடிதஉறையுடன் கடிதம்ஒன்று கீழேகுறிக்கப்படும் விலாசத்துக்கு அனுப்பலாம். வசதியிருந்தால் செலவுக்காக முத்திரைகள்மூலம் சொற்பபணமும் அனுப்பவும்.

B. A. P.

St. Xavier's College,
N-Eliya.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த அதிசயஏழை யார்?

அந்தஏழை மாட்டுத்தொழுவத்தில் இயற்கைத்தரித்திரத்தில் பிறந்தார். அதன்மடியிலே தவழ்ந்தார். அதன் அன்பிலே — காதலிலேசீவித்தார். அதன்கரங்களிலே மரித்தார். அதன் மத்தியிலே மகிமையோடு வீற்றிருக்கின்றார். அந்தஏழை.........?

கத்தோலிக்கதிருமறைச் சரித்திரத்திலே "பொற்காலம்"எனப் பெயர்கொண்ட 13-ம்நூற்றாண்டினை அலங்கரிக்க 1182-ம்ஆண்டு நசரேத்தூர்ஏழையைப்பின்பற்றி மாட்டுத்தொழுவத்தில் அசிசிநகர் ஏழைபிறந்தார். ஆனால், உண்மையான ஏழையல்ல, ஓர்செல்வந்தரான வர்த்தகனின் மகன். சிறுபிராயத்தைப் படிப்பைக்காட்டிலும், விளையாட்டுப்போட்டிகளிலும், களியாட்டவோட்டங்களிலும் கழித்தார். ஓர்படைக்குத் தளகர்த்தனாகிப் பேரும் புகழும் பெறவிரும்பித் தக்கஆயத்தத்தோடு தனதுஊரைவிட்டுப் புறப்பட்டார். ஆனால், தேவாதீனம் அவரைத் தாழ்ச்சியிலும், தரித்திரத்திலும் வழிநடத்தி ஒருபெரும்ஏழைப்படைக்குத் தளகர்த்தனாய்ப் — பிதாப்பிதாவாய் உருவாக்கிவிட்டது.

திரும்பினார் சுவிசேஷத்துக்கு. "போர்சியுங்குலா"என்னும் கோயிலில் மாசிமாதம் 24-ம்நாள் வாசித்த சுவிசேஷத்துக்கிணங்கப் பாதரட்சையையும், ஊன்றுகோலையும்விட்டெறிந்தார். தரித்தார் தவத்தின்அங்கியை. கட்டினார்இடையில் ஒருகயிற்றை. புறப்பட்டார்வெளியில். அக்காலநிலைபரத்துக்கு அவசியமாயிருந்த தரித்திரத்தையும், தாழ்ச்சியையும் கூச்சமின்றிப் பிரசங்கித்தார். பிச்சைஇரந்து சாப்பிட்டார். மக்களின் மனதில்தைத்தது இவரின் நவீன வாழ்க்கையின்போக்கு. உண்மையைஉணர்ந்தசிலர் இவரைநாடினர். உருவாயது "சிறியசகோதரர்" சபை. பன்னிருவர்சேர்ந்தனர். பரிசுத்த பாப்பானவரைக் காணச்சென்றார். ஆனால், அங்கிருந்தவர்கள் இவர் ஓர்ஏழைப் பைத்தியகாரனென்று துரத்திவிட்டார்கள். அன்றுஇராத்திரி பாப்பானவர் ஓர்கனவுகண்டார். அதாவது, "லத்தறன்"தேவாலயம் இடிந்துசரிகிறதாகவும், முந்தியநாள்வந்தஏழை அதைத் தனது தோளைக்கொடுத்துத் தாங்குகிறதாகவும் கண்டார். மறுதினம் அழைத்தார் அந்தஏழையை. அவரது உந்நதநோக்கத்துக்குஇசைந்து "சிறியசகோதரர்" என்ற ஏழைச்சபையை ஏற்றுக்கொண்டார். கையில் ஒருசதமேனும்மிச்சம்வைக்காத பரமஏழையாயிருந்தும், மூன்றுவருடங்களுள் அறுபதுமடங்களைநிறுவிக் கணக்கற்ற ஏழைத்துறவிகளைத் தவத்தின்பாதையிலே, தரித்திரத்தின்அடிச்சுவட்டிலே, புண்ணிய சாங்கோபாங்கத்திலே வழிநடத்தினார்.

தமது பிரசங்கத்தைக் கேட்டு— சீவியத்தைக் கண்டுணர்ந்து தம்மைப் பின்பற்றவிரும்பிய கிளாரம்மாளை ஏற்றுக் குருத்துஞாயிறன்று தரித்திரவஸ்திரம் தரிப்பித்துக் "கிளாராவின் ஏழைச்சகோதரிகள்"என்ற கன்னியர் சபையை இரண்டாம்சபையாக ஏற்படுத்தினார்.

இன்னும் அவரது தரித்திரவாழ்வானது — வாழ்க்கையின் சக்தியானது மெய்விவாக தேவதிரவியஅனுமானத்தால் பிணைக்கப்பட்டு இல்லறத்தை நடத்திய இல்லறவாசிகளையும் அவர்பால் இழுக்கவே, அவர்களையும் கைவிடாமல் உலகவாசிகளுக்கென மூன்றாம்சபையை — இல்லறத் துறவிகள் சபையை ஏற்படுத்தியருளினார் இந்தப் புண்ணியபுருஷர்.

இவ்வளவும்செய்த இந்தஏழையானவர் யேசு அரையில் கட்டத்தானும் ஒரு கந்தையுமின்றிச் சிலுவையில் தொங்குவதைக் கண்ணுற்று "இல்லாதிருப்பதே இன்பம்" என்பதைக் கடைப்பிடித்துத் தமது சீவியகாலத்தில் தமக்கென ஒருஅறைமுதலாய் வைத்துக்கொண்டவரல்ல. தம்மையிட்டு இவ்வளவுஎளிமையைத் தெரிந்துகொண்ட இந்தமகானைக் கிறீஸ்துநாதரும் விட்டுவைக்கவில்லை. தமது சிலுவைமர வெற்றிச்சின்னத்தை — பாடுகளின் மகிமையை — ஐந்துதிருக்காயங்களை இந்த ஏழைமனிதனில் அணிவித்து— பதிப்பித்துத்தம்முடைய உண்மையானசாயலாக்கினார். இத்தனைவறுமையான— சிறுமையான— எளிமையான வாழ்வுவாழ்ந்து துண்டப்படும் அசீசியின் சிறியமனிதரை இக்கண்ணீர்க்கணவாயில்வைத்துக்கண்ணீர் சிந்தவைக்க மனமற்றவராய் மோட்சபிதா 1226-ம்ஆண்டு தமதுமகிமையில் அவரைஏற்றுக்கொண்டார்.

ஆனால், அவரது மரணத்தின்போதும், மரணத்தின்பின்னும் தரித்திரமாகிற இராணியையும், தாழ்ச்சியாகிய நண்பனையும் கைவிட்டவரல்ல. அவர் சரீரத்தில் வஸ்திரமின்றி வெறும்தரையில்படுத்துச் சிலுவைவடிவாய்க் கைகளைவிரித்துக் கொண்டிருக்கும்போது அவருடைய தூயஆன்மாவானது தன்னைஉருவாக்கிய— தான்பின்பற்றிய இறைவன்திருவடிநிழலை அடைந்தது. அவர்மரித்தபின்பும் அவர்விரும்பியபடி அவர்திருச்சரீரம் மரணதண்டனை அடைந்தவர்களை அடக்கஞ்செய்யும் "நரகமேடு" எனப்பட்ட ஈனஸ்தலத்தில் அடக்கம்செய்யப்பட்டது. ஆனால், அம்மேடு இன்று "பரகதியின் மேடு" என்று அழைக்கப்படுகிறது. ஈனஸ்தலமாய் விளங்கியது இன்றுபுனிதஸ்தலமாய் மிளிர்கிறது.

இவ்வேழையாலும், அவரதுஏழைமக்களாலும் திருச்சபைஅடைந்த— அடைகின்றநன்மைகள் அனந்தம். நத்தால்திருநாளிலேஆண்டவன் பிறந்த ஆவுறையும் குடிலமைக்கும் வழக்கத்தைத் தொடக்கியவரும், ஆவணித்திங்கள் இரண்டாம்நாள் கத்தோலிக்கஉலகம்அடையும் (போர்சியுங்குலா) பரிபூரணபலனை அடைய வழிவகுத்தவரும் இவரே. இன்னும் சிலுவைப்பாதைப் பக்தி, திருமுகப்பக்தி, திரிகாலச்செபப் பக்திமுதலிய பலபக்திமுயற்சிகளையும் திருச்சபையிலே விதைத்துவிட்டவர்களும் இவரைப்பின்பற்றிய சிறியசகோதரர்களேயாவர். தேவமாதா ஆத்தும சரீரத்தோடு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதை உறுதியாய் வெளிப்படுத்தியவர்களும், (அர்ச். அந்தோனியார்) மாதாவின் அமல உற்பவத்தை உறுதியாய் எடுத்துப்பேசியவர்களும் (ஜோண் டணஸ்கோட்டன்) இம்மகானின் தரித்திர வித்துக்களேயாம். இப்படியாகத் திருச்சபைக்கும், அதன் மக்களாகிய எமக்கும் இவ்வளவு அளப்பரியநன்மைகளைப்புரிந்த இந்த ஏழையார்? 3,500பேருக்கு அதிகமான புனிதர்களைத் திருச்சபைக்குத் தந்த இந்தஅதிசயஏழையார்? ஏழைகளின் இருதயகமலங்களில் எழுந்தருளியிருக்கும் அடியவருக்கு எளியவராகிய அன்பரைக்கண்ட தரித்திரத்தின் காதலனும் இவர்யார்? "சிநேகம் சிநேகிக்கப்படவில்லையே!" என்று கிறீஸ்துநாதரின் அன்பால் ஓலமிட்ட இந்தயேசுஅன்பன் யார்? தனதுபிறப்பிலும், சீவியத்திலும், மரணத்திலும், மரணத்துக்குப்பின்னும் உண்மையாகவேகிறீஸ்துநாதரைப்பின்பற்றிய "கிறீஸ்துபிரானின் சிறந்தசாயல்"—"இரண்டாம்கிறீஸ்து"எனப் புகழப்படும் இந்த மகான்யார்? பக்திச்சுவாலக தந்தையென்று எண்ணற்றஏழைகளால— ஞானமக்களால் எண்டிசையும்அழைக்கப்படும் இந்தப்பக்திச்சுவாலகர் யார்?

ஆம், இவர்தான் உலகின் எண்டிசாமுகமும் பரவியுள்ள பிரான்சீஸ்கன் சபையை அடியிட்டவரான அசீசி மகான் **ஐந்துகாயப்பிரான்சீஸ்கு அசீசியார்?**

ஆகவே, கிறீஸ்தவசகோதரர்களே! கத்தோலிக்க திருச்சபைக்கு, ஏன், நமக்கே இத்துணைநன்மைகளைச்செய்த "அசிசிநகர் ஏழையைமறப்பது நன்றியறியாமை அல்லவா? ஆகவே, அகில உலகத்திலும் ஆச்சரியத்துக்குரியவிதமாய்ப் பலுகிப்பெருகியுள்ள பிரான்சீஸ்கன்சபையாரோடு நாமும் சேர்ந்து திருச்சபையில் அன்னாரின்மகிமைக்காகக் குறிக்கப்பட்டுள்ள ஐப்பசிநாலாம் நாளை—பிரான்சீஸ்குதினத்தைச் சிறப்பித்து அவரை வாழ்த்தித்துதித்து, "மனத்தரித்திரர் பாக்கியர், ஏனெனில், மோட்சம் அவர்களுடையது" என்றபடி மோட்சமகிமையை அன்னாருக்களித்த மோட்சபிதாவுக்கு நன்றி செலுத்துவோமாக.

— ஏழைமகன்

# தாம் ஓர் கிறீஸ்துவர்தானா?

(முன் தொடர்ச்சி)

கடைசியாக மார்த்தீனாள் தனதுபெற்றோரையும், அருமைச்சகோதரனையும் பிரிந்துபோகவேண்டியவேளை அணமியது. மின்னிக்குமுறி மழைபெய்வதுபோல விம்மல்பொருமல்களின் மத்தியிலே அவர்களதுகண்களிலிருந்து கண்ணீர்பெருகத் தொடங்கியது. மார்த்தீனாள் அப்பா என்றாள். அம்மா என்றாள். அண்ணா என்றாள். ஈற்றில் நான் போய்வருகிறேன்என்று இருகன்னங்களிலும் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, உருக்கமாக மொழிந்தாள். உங்களையெல்லாம்விரைவிலே மோட்சத்தில் சந்திப்பேனென நினைக்கிறேனென்று உற்சாகத்துடன் பகர்ந்து இருகரமெடுத்து அவர்களை வணங்கினாள். அப்போது அவர்கள்மூவரும்கண்ணீர்பெருக அந்தச்சிறியவேதசாட்சியைக்கட்டியணைத்து முறையே முத்தமிட்டார்கள். இந்தக் கண்ணுருவியானகாட்சியைக் கண்ணுற்ற படைத்தலைவனே கண்கலங்கிக் கதிகலங்கி நின்றானெனில் பின்னர் பேசுவானேன்?

தனதுபெற்றோரினதும், சகோதரனினதும் கலங்கியநிலையைக் கண்ணுற்ற மார்த்தீனாள் அவர்களைநோக்கி, "அப்பா! அழவேண்டாம், அம்மா! அழவேண்டாம், அண்ணா! அழவேண்டாம்; என்னோடுநீங்களும் சந்துஷ்டிகொள்ளுங்கள்! சந்தோஷங்கொண்டாடுங்கள்! என்னைவரவேற்பதற்குப் பரலோகவாசல் அதோ! திறந்தாற்போல் எனக்குத் தோற்றுகின்றது; அங்கே நாம்அனைவரும் ஒன்றாகக்கூடி நித்தியகாலமும் கிறீஸ்துநாதரோடு நிலையாக வாழ்ந்திருப்போம்" என்று ஆறுதல் கூறியபோது, படைத்தலைவன் அவளைவிழித்து, இனிமேல்ஒருகணமும் நான் தாமதிக்கமாட்டேன்; இந்தமட்டும் பொறுத்ததுபோதும்போதும்; பெண்ணே புறப்படுஎன்று சிங்கம்போன்று கர்ச்சனைசெய்தான்.

இதுகேட்டமார்த்தீனாள் தாமதமின்றியே வெளிகொண்டாள். அவளின் பின்னால் மனையின்வெளிவாயில் வீதிவரையிலே பெற்றாரும், சகோதரனும் சென்றார்கள். ஆனால், அவர்கள் அவளைப்பின்தொடரப் படைத்தலைவன் முன்போல அனுமதிக்கவில்லை. மார்த்தீனாள் மற்றுமோர்தரம் இருகரம்கூப்பி அவர்களுக்கு வணக்கஞ்செய்துவிட்டுப் போர்வீரரும், அவர்கள்தலைவனும் உருவியவாளுடன் புடைசூழ்ந்து செல்ல அவர்களுடன் புறப்பட்டுச்சென்றாள். கண்ணீரோடும், கம்பலையோடும் கண்ணுக்கெட்டுகிற தூரம்வரையிலே அவளைக் கண்ணோக்கியபடியே நின்றுவிட்டுக் கவலையேகுடிகொண்டவர்களாய் அவள்தந்தையும், தாயும், சகோதரனும் மனையுள் பிரவேசித்தார்கள். அன்று அவர்கள்மனம் பட்டபாடோ இம்மட்டென்று சாற்றுந்தரமன்று. ஓர்மணிச்சுடரேபோன்று தீயஸ்பிரபுவின்மனையை விளக்கிக்கொண்டிருந்த மார்த்தீனாள் வெளிகொண்டதே அலங்காரமிக்கஅம்மனை அழகும்,ஒளியும்குன்றியதாய், இருள்சூழ்ந்ததாய்க் காட்சியளிக்கத் தொடங்கியது. புதல்வியின் பிரிவையிட்டுப் பிரபுவும், அவர்மனைவியும் துயரேவடிவாய்த் தோற்றமளித்தபோதிலும், அவள் பரலோகத்திலே கன்னியர்களான வேதசாட்சிகளின் குழுவில் சேரப்போவதையிட்டு மனஆறுதலும், சந்தோஷமும் அடைந்தார்கள்.

போர்வீரரும், படைத்தலைவனும் உருவியவாளுடன் புடைசூழப் பாதசாரியாய்ப் பாவைமார்த்தீனாள் ஆனந்தமாகநடந்துசெல்வதைக் கண்ணுற்ற வழிப்போக்கரும, ஏனையவர்களும் ஆச்சரியவசத்தராய் ஒருவரையொருவர் விழித்து, அவளைப்பாருங்கள்! அன்னநடையைப்பாருங்கள்! அழகியகூந்தலை— அலங்கார உடையைப் பாருங்கள்! அவள் வதனத்தில்தவழும் புன்னகையைப் பாருங்கள்! ஒருநல்லஇடத்துப் பிள்ளையைப்போல் இருக்கிறாளே! அவள் என்னகுற்றம் புரிந்தாளோ! என்றெல்லாம் சொல்லிப் பரிதபித்தார்கள். இவ்விதம் பார்த்தவர்களெல்லாம் பரிதபித்திரங்கமார்த்தீனாள் உள்ளமேகலங்காது உற்சாகமாக நடந்துசென்று அரசமாளிகைபோய்ச்சேர்ந்தாள்.

மார்த்தீனாள் தங்கள்மனையைவிட்டுப் புறப்பட்டுச்சென்ற அன்றுபகல்முழுவதும் பிரபுதம்பதிகள் அவளைப்பற்றிய சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தார்கள். தான்இரையாகப்போடப்படும்கொடிய சிங்கங்களுக்கு எட்டுணையுமேஅஞ்சாது இறுதிவரை திடவிசுவாசமாய் அவள் இருக்க அருள்பாலிக்குமாறு வானத்தைஏறெடுத்துப் பிரார்த்தித்தவண்ணம் இருந்தார்கள். அவள்பக்கத்திலிருந்து தென்பளிக்குமாறு அவளுடையகாவற்சம்மனசானவரையும் மன்றாடினார்கள். ஒன்று, இரண்டு, மூன்றாக மணித்தியாலங்கள் ஒன்றொன்றாகக் கழிந்துகொண்டேயிருந்தன. அருமை மகளைப்பற்றிய ஏதாவதுசெய்தி கிடையாதோவென்று அவர்களுடைய மனங்கள் இடையிடையே ஆங்கலாய்த்தன. ஆனால், அவர்களின்மனை கட்டுக்காவலில் இருந்தமையால் எவருமே வெளிகொள்ளவும், உட்செல்லவும் முடியாதிருந்தது. இந்த நிலைமையிலே கடைசியாகச் சூரியனும்மேல்திசையை அடைந்தான். எங்கும் இருள் கவியத் தொடங்கியது.

(வளரும்)

---

● அயர்என அறியப்படும் சுதந்திர அயர்லாந்தின் பிரதமரான திரு. டி. வலேறாஅவர்கள் அன்றுசனிக்கிழமை பிரத்தியேகயாத்திரையாய் லூர்துபதிக்கு ஆகாயவிமானத்தில் சென்று, அங்கே ஐந்துதினங்கள் தங்கியிருந்து, மரியாயின் சர்வதேசமகாநாட்டிலே ஐரிஷ்மக்களின்கூட்டத்தில் பிரசன்னமாய் இருந்தார்.

● முன்னைநாள் ருஷ்யபிரதமரான திரு. மலங்கோவ் சுமார் பன்னிரு வாரங்களுக்குமுன் காமியோகாறிஸ்க் எனுமிடத்திலே தற்கொலை செய்துகொண்டதாக லண்டன்நகரிலே வெளியாகும் "டெய்லி எக்ஸ்பிறஸ்" பத்திரிகை தெரிவித்துள்ளது. ஓர்புதிய வழக்கிலே அவர் முக்கிய எதிரியாக இருந்தமையால் அதிலிருந்து தப்பிக்கொள்ளுமாறே அவர் தற்கொலைசெய்துகொண்டதாகச் சொலலப்படுகிறது.

● ஒல்லாந்திலே ஹார்லெம்நகர் அர்ச். பாலோவின் ஆசனக்கோவிலில் சிலதினங்களின்முன் நடைபெற்ற ஓர் திருவைபவத்தின்போது, ஹூய்போஸ் மேற்றிராணியார் மிஷன்நாடுகளுக்குச் செல்லவிருந்த குருமார், பிறதர்மார், கன்னியாஸ்திரிமார், மற்றும்சாதாரண கத்தோலிக்கரான 339பேருக்கு மிஷன்சிலுவைகளைச் சங்மானிக்கலாயினர். இவர்களிலே 198குருமாரும், 84கன்னியாஸ்திரிமாரும், 64பிறதர்மாரும், 27சாதாரணகத்தோலிக்கரும் அடங்கியிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



## மகாவந். மேற்றிராணியாண்டவரின் கடிதம்

**கிறீஸ்துவில் எமக்கு மிகவும் அருமையான பிள்ளைகளே !**

செபமாலைமாதாவின் வணக்கமாதம் இன்று ஆரம்பமாகிறது. கிறீஸ்துவின் அன்பர்களாகிய உங்களுக்கும், மறைஉடலாகிய முழுத் திருச்சபைக்கும் தேவவரங்கள் பெருகும் மாதம் இது.

அமலஉற்பவ மரியன்னை லூர்துமலை, மசபியேல்குகையில் தரிசனம்அளித்து நூறுஆண்டுகள் ஆகின்றன. அதைநாம் இவ்வாண்டு அனுசரிக்கிறோம்.

தேவதாயின் காட்சிபெற்ற பதினான்குவயதுச் சிறுமி பேர்னதெத் முதல்முறை அக்காட்சியைக்கண்டு இது கனவோ, நனவோ என ஐயமுற்றாள். பேயின் மாயதோற்றமோஎன அஞ்சினாள். தன் சட்டைப் பைக்குள் இருந்தசெபமாலையை எடுத்தாள் செபிக்க.

சிலுவைஅடையாளம் வரையக் கையைஉயர்த்தியபொழுது அசைக்கமுடியவில்லை. பின் தரிசனங்கொடுத்த அம்மாள் தாமே சிலுவை வரைந்தபொழுதே பேர்னதெத்தும் வரையமுடிந்தது. பின், அம்மங்கை தன்கையில் தொங்கிக்கொண்டிருந்த செபமாலையை எடுத்து, தாம்செபிக்கும் பாவனையாக மணிகளைஎண்ணத் தொடங்கினாள். அச்செயலால் செபமாலைசெபிப்பது தமக்குமிகவும் பிடித்தமானதுஎனக் காட்டினள் அன்றோ.

பேர்னதெத் மசபியேல் குகைக்குப்போன ஒவ்வொருமுறையும் செபமாலை செபித்துக்கொண்டிருக்கும்வேளைதான் தரிசனங்கிடைக்கும். செபிக்குப்படி தேவஅன்னை கொடுத்தகட்டளையை பேர்னதெத்தும், அன்னையின் அடியாரும் செபமாலை செபிப்பதனால்தான் நிறைவேற்றினர்; இன்னும் நிறைவேற்றுகின்றனர். எனவே, நீங்களும் இம்மாதத்தில் விசேஷகரிசனையுடன் செபமாலை செபியுங்கள்.

உங்கள் பாடசாலைகளிலோ, நற்கருணை சிம்மாசனத்தில் உயர்த்திவைத்திருக்கும் புங்குக்கோவில்களிலோ ஒவ்வொருநாளும் செபமாலைத்தியானத்தில் சேர்ந்துகொள்ளுங்கள்.

நேரடியாகத் திருச்சபையைஎதிர்த்து அழிக்கமுடியாது எனக்கண்ட நாஸ்திகர் பொய்த்தேசியக் கொள்கைஎனும் ஆப்புக்கொண்டு அதைப்பல்வேறு தேசங்களில்பிரித்து வருகின்றனர். உலகில் திருச்சபைக்குச் சுயாதீனம் கிடைக்க வேண்டுங்கள்.

கட்டுக்கடங்காத தேசியக்கொள்கையை விடுத்து, உண்மையான ஒற்றுமையையும், உறுதியையும்தரும் சகோதர அன்புக் கொள்கையை நாம்கைக்கொள்ள வேண்டுமெனச் செபியுங்கள்

செபமாலைத் தியானத்தால், மரியன்னையின் வழிகாட்டுதலால் நீங்கள் அனைவரும் தேவஅன்பில் நிலைகொள்ள முயற்சியுங்கள்.

இந்தவரங்களுக்கு அச்சாரமாக உங்களுக்கு மனப்பூர்வமான ஆசிஅளிக்கின்றோம்.

கிறீஸ்துவிலும் அமலோற்பவ மரியாயிலும்
உங்களன்புள்ள,
✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

—*—

## மனமாற்றமும் மன்னிப்பும்

சரித்திர ஆசிரியர் சரித்திரபாடங்களை ஊக்கமாகப் படிப்பித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு மூலையில் இருந்த ஜிலஸ் தனது பாடப் புத்தகத்திற்கு மேல் கதைப் புத்தகம் ஒன்றை வைத்துக் கவனமாக வாசித்துக்கொண்டிருந்தான். அதைக் கண்டு ஜிலஸின் மேசைக்குப் பின் வரிசையில் அமர்ந்திருந்த மோறிஸ் எழுந்து ஆசிரியரை நோக்கி: "சார்! ஜிலஸ் கதைப் புத்தகம் வாசிக்கிறான்" என்று கூறினான். உடனே வகுப்பிலுள்ள அத்தனை கண்களும் ஜிலஸை நோக்கின. ஆசிரியர் அவனை அழைத்து விசாரித்தார். விஷயத்தை அறிந்துகொண்டதும் அவர் கண்கள் கோபத்தால் சிவந்தன. அந்தக் கதைப் புத்தகத்தை இரண்டாகக் கிழித்தெறிந்து அவனுக்குப் பிரம்பால் ஆறு அடி கொடுத்தார். ஜிலஸ் அழுதுகொண்டே தனது இடத்தை அடைந்தான்.

சிறிதுவேளையில் வகுப்பு முடிவடைந்தது. மாணவர்குழாம் புற்றீசல்போல வகுப்பைவிட்டுப் புறப்பட்டது. அப்போது வீட்டைநோக்கிச் சென்றுகொண்டிருந்த மோறிஸின் முதுகில் தொம், தொம் என்று இரண்டு குத்துகள் விழுந்தன ஜிலஸ் குத்திவிட்டு அக்களிப்புடன் ஓர் வீரனைப்போல் மோறிஸைக் கடந்து சென்றான். மோறிஸும் அழுதபடியே தன்னுடைய முதுகைத் தடவிக்கொண்டு வீடுநோக்கிச் சென்றான். அப்போது அவன் மனம் ஜிலஸைப் பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்று உறுதிபூண்டது.

மறுநாட்காலை வேகமாக மோறிஸ் பாடசாலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். இன்று ஜிலஸுக்குக் கட்டாயம் நல்ல அடி போடத்தான் வேண்டும் என்று மனதில் தீர்மானித்துக்கொண்டே சென்றான். அவன் செல்லும் வழியில் மாதாகோயில் இருந்தது. வழமைபோல மோறிஸ் செபஞ்செய்யக் கோவிலுக்குச் சென்றான். அங்கே யேசுநாதர் கற்றூணில் கட்டுண்டு அடிபட்ட சுரூபத்தின்முன் முழந்தாட்படியிட்டான். பின்னர் அதனை ஓர்தரம் ஏறிட்டுப் பார்த்தான். பார்த்ததே அன்று வண. அகுஸ்தீன் சுவாமியார் ஞானஒடுக்கத்தில்கூறிய சம்பவம் அவன்ஞாபகத்தில் வந்தது. யேசுநாதர் தம்மைச் சாட்டைகளால் அடித்தவர்களையும், முகத்தில் காறித் துப்பியவர்களையும், தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களையும் நல்லமனதோடு மன்னித்துவிட்டார் அல்லவா? எனக்கு ஜிலஸ் இரண்டு குத்துகள்தானே குத்தினான். என்றாலும் அவனை என்னால் மன்னிக்க முடியாதா? என்று தனக்குள் வினவினான். ஆனால், மற்றோர்புறம் ஜிலஸைப் பழிக்குப்பழி வாங்கத்தான் வேண்டும் என்று மனதில் தோன்றியது. என்றாலும், ஜிலஸை மன்னிக்க வேண்டும் என்ற எண்ணம் தான் வெற்றிகொண்டது.

மோறிஸ் வகுப்பை அடைந்ததும் ஜிலஸைக் கண்டான். ஜிலஸ் மோறிஸைக் கண்டவுடன் மெதுவாக நழுவினான். உடனே மோறிஸ் அவனை அணுகி, ஜிலஸ்! ஏன் பயப்படுகிறாய்? நான் உன்னை மன்னித்துவிட்டேன்; நீபயப்படாதே என்றான். உடனே ஜிலஸின்கண்கள் கலங்கின. "என்னை மன்னித்துவிடு மோறிஸ்; ஆத்திரத்தில் அறிவை இழந்தேன்" என்றான்.

எஸ். ரி. பீரிஸ் — கொழும்பு

## வீரனைப் பயின்ற வனிதை

(முன்தொடர்ச்சி)

பிறடெறிக்கின் மனதில் ஓர்வெளிச்சம் தோன்றியது. உற்சாகத்துடன் துள்ளி எழுந்தார். "எமது சேவைக்குத் தேவ ஆசி அவசியம்; ஏழைகளின் ஆசியே தேவஆசி; ஏழைகளைத் தேடிச்செல்வோம் வாருங்கள்" என அறைகூவினர்.

நன்மைபயக்கும் ஓர்தருவுக்கு வித்திட்டு வைத்தவள் அன்னை. உடனேயே அங்குநின்ற ஒருவருடன் குளிரைப் போக்குவதற்குத் தமக்கென இருந்த விறகுடன் அடுத்த வீதியில் வசித்த ஒரு ஏழையிடஞ் சென்றார். அந்தவிறகு உலகத்தில் அன்புப்பெருந்தீயை மூட்டிவிட்டது என்றால் மிகையன்று.

பணிசெய்யும் வழியைப் பிறர்சிநேகக் கன்னியர் ஒருவரிடங் கேட்டறிந்து பிறடெறிக்கும், அவருடைய ஐந்துதோழரும் ஏழைகளைத் தரிசிக்கத் தொடங்கினர். நிலக்கரி, உணவுச்சீட்டு, பழையஉடைகள் முதலியன கொடுத்தனர். சீர்கெட்ட உலகத்தைச் சீர்ப்படுத்தி வறுமையை அறவே ஒழித்துக்கட்ட மந்திரக்கோல் தன்னிடம் உண்டெனத் தம்பட்டமடித்த நாத்திகன் ஒருவன் "பரீஸில் உள்ள வறுமையைக் குறைக்கக் கையிற் காசற்ற ஆறு மாணவர் என்ன செய்யக்கூடும்? எனதுதிட்டம் வறுமையை முற்றாக முடிவுகட்டும்" எனக் கொக்கரித்தான்.

"பேச்சுத்திறம்" என்றார் பிறடெறிக். "திட்டம் அடுத்த வீதியிலுள்ள அப்பாவியின்வயிற்றை நிரப்புமா?" இருபது ஆண்டுகளுக்குள் பரீஸில் மாத்திரம் இரண்டாயிரம் கத்தோலிக்கமக்கள் இருபதினாயிரம் ஏழைகளுக்கு ஊணும், உடையும் அளித்து வருவார்கள் என எவருமே கனவிலும் கருதவில்லை.

### மிஷன் ஞாயிறு

இம்மாதம் 19-ம்நாள் மிஷன் ஞாயிறு. அதாவது, வேதத்தைப்பரப்ப ஆண்பெண் அனைவர்க்கும் கடமைஎன நினைவூட்டும் தினம்.

யேசுவின் திருமார்க்கமே மக்கள்முத்தியடைய ஒரேமார்க்கமென நாம் அறிவோம். அம்மார்க்கத்தை உலகமெங்கும் எடுத்தோதி ஈடேற்றவழியைக் காட்டுவதில் குருமார், கன்னியர், ஆசிரியர் ஆகியவர்கள் ஈடுபடுகிறார்கள். அவர்களுடைய முயற்சி அனுகூலமாகத் தேவஉதவி தேவை. எனவே, வேத வளர்ச்சிக்காக மன்றாடுங்கள்.

புதிய இடங்களில் கோவில், பள்ளிக்கூடம், ஆசிரியர், உபதேசிமாரது சம்பளம், மருந்துச் சாலைகள், அனாதை மடங்கள்மாத்திரமல்ல, புதுக்கிறீஸ்துவர்களுக்குச் சில தருணங்களிலே வாழ்க்கைக்கு வழிவகுக்கவும் வேண்டும். எனவே, பணம் தேவை. சிறுவராகிய நீங்களும் உதவவேண்டும்.

இந்தச் செபமும், தருமமும் வருட முழுவதிலும் செய்ய வேண்டிய கடமைகள். ஆயினும், மிஷன்ஞாயிறுதினம் இக்கடமைகளை நினைவுறுத்தும் தினம். தாராளமாய்க்கொடுத்தால் அபரிமிதமாய்த் தேவ ஆசி கிடைக்கும்.

### முதற்பந்தி

1853-ம் ஆண்டு வைகாசி மாதம் அந்தஅறுவரும் ஸ்ரீ பெய்லியின் தலைமையில் தமது சகோதரப் பணியின் முதற்பந்தியை நடாத்தினார்கள். அர்ச். வின்சென்ற் தபவுல் என்பாரின் பாதுகாவலில் நடந்துவரும் தருமசபைகளின் ஆரம்பம் அதுவென்றே கருதப்படுகிறது. அப்பெயர் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே இடப்பட்டது. அப்பொழுது ஒரு நூறு அங்கத்தவர்களுக்கு அதிகமிருந்தனர். பிரான்சின் பிற இடங்களிலுமுள்ள இல்லறக் கத்தோலிக்கர் யாவரும் சேர்ந்து பணியாற்ற வசதியளித்துள்ளது அப்பந்தி.

அந்தஇருஆண்டுகளிலும் நாத்திகருக்கும், வறியவர்கட்கும் கத்தோலிக்கசேவை புரிந்ததுமன்றி மொழியறிவிற் தேர்ச்சியும் பெற்றார். பிறமத ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார். அதைப்பற்றித் தமது தாயாருக்கு எழுதினார். அவருடைய சட்டப் படிப்புத் தடைப்படுமோ எனத் தாய் பயந்தாள். அவர் அவளைத் தேற்றி: "அருமை அன்னாய்! எனது சட்டப் படிப்புகளை எதுவும் தடைசெய்ய இடங்கொடேன்; ...... எனக்காக நீங்கள் செய்த தியாகத்திற்குப் பதில்செய்ய அவசியம் நேர்ந்தால் நான் தயாராயிருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்" என எழுதினர்.

சந்தர்ப்பம் அப்படியேயாயிற்று. 1836-ம் ஆண்டு சட்டநிபுணர் பட்டத்துடன் பரீஸை விட்டுச்சென்று லியோன்ஸ்நகரில் வழக்கறிஞர் உத்தியோகத்தைத் தொடங்கினார். தந்தையார் இறந்துபோனதாலும், அல்போன்ஸ் குருவாகவும், சார்ள்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியகல்லூரியிலும் இருந்தபடியாலும் பிறடெறிக் தாயாரின் ஏக ஆதரவாயினர். அவனுடைய தேக சுகமுங் குன்றியது. அவர் தமது நெருங்கிய நண்பருக்கு "எனக்காக அல்ல, என் அன்னைக்காக வேண்டிக் கொள்ளும்; அவளுக்காகச் செய்யும் வேண்டுதல் எனக்காகும்" என எழுதினர்.

அவருக்கு வேலையும், தாம் ஏழைகளில் அனுதாபமுங் கொள்ளக்கற்ற அதேபட்டணத்தில் சபையை நிலைநாட்டுவதில் முயற்சியுமிருந்தாலும் அன்னையின்பிரிவைத் தாங்கமாட்டாமல் சந்நியாசம்புக எண்ணினர். இல்லறத்திலிருந்து தேவனுக்குச் சேவைசெய்யும் அவரின் ஆதி நோக்கமே அவருக்கேற்ற சேவையென நுவமுருட்சுவாமியார் கூறக்கேட்டு மனந்தெளிந்துகொண்டார்.

(வளரும்)

# மறவாதே தம்பி

காலையிலே எழுந்திடுவாய் தம்பி
கடமைதனைச் செய்திடுவாய் தம்பி
கவனமுடன் படித்திடுவாய் தம்பி
கடந்தவை நினையாதே தம்பி.

●

அன்பாய் இருந்திடுவாய் தம்பி
அறமது செய்திடுவாய் தம்பி
அறிவை வளர்த்திடுவாய் தம்பி
அகம்பாவம் கொள்ளாதே தம்பி.

●

இனிமையாய்ப் பேசிடுவாய் தம்பி
இறைவனைத் தொழுதிடுவாய் தம்பி
இகழ்வதை நீக்கிடுவாய் தம்பி
இரப்பாரை இகழாதே தம்பி.

●

உதவிகள் செய்திடுவாய் தம்பி
உயர்வையே எண்ணிடுவாய் தம்பி
உழைப்பை விரும்பிடுவாய் தம்பி
ஊக்கத்தை மறவாதே தம்பி.

—V. V.

● துடிதுடிக்கும் தலையங்கம்
● விறுவிறுப்பான விமர்சனம்
● கருத்துக்கினிய கதைகள்

தாங்கிவரும்

## "கத்தோலிக்கு சேவை"

— மாதம் இருமுறை —

சந்தா ரூபா 3-50

விபரங்களுக்கு :

Mr. A. C. Silveira,
Treasurer,
Legion of Mary,
181, Bankshall Street, Colombo-11.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ஞஞ்சபை

வருகிற ஐப்பசிமாதம் 4-ந்திகதி எமது பிதாவாகிய அர்ச். பிரான்சீஸ்குவின் திருநாள்மகோற்சவம் வருகின்றது. திவ்விய பூசையின்போது எல்லோரும் சபைஉடை அணிந்து, திவ்வியசற்பிரசாதம் பெற வேண்டுமாகையால் அவைகளைத் தப்புரவாய்க் கொண்டுவரும்படி நினைவூட்டுகின்றேன். புரட்டாசிமாதம் நடக்கவேண்டிய மாதாந்தகூட்டம் ஐப்பசிமாதம் 4-ந்திகதியன்று நடைபெறும். ஐப்பசிமாதம் 3-ந்திகதி சபையாருக்குக் கடன்ஒருசந்தி என்பதை உங்களுக்கு நினைவூட்டுகின்றேன்.

### திருநாள் கிரமசூசி

புதன், வியாழன், வெள்ளி
(1-ம், 2-ம், 3-ம்) திகதிகளில்
மாலை 6-30மணிக்கு ஆசனக்கோவிலில்

### திரிதின ஆராதனை

ஐப்பசி 4-ந்திகதி சனிக்கிழமை

**காலை 6-30மணிக்கு**

1. திவ்வியபூசைப்பலியும்,பிரசங்கமும்.
2. திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம்.
3. பொதுப் பாவமன்னிப்பு.
4. அர்ச். பிரான்சீஸ்குவின் சங்கீதமும், பிரார்த்தனையும், செபமும்.

**மாலை 4-15மணிக்கு**

1. வாக்குத்தத்தம்.
2. பரிசுத்த பாப்பாண்டவரின் ஆசீர்வாதம்.
3. மாதாந்த கூட்டம்.
4. சிற்றுண்டி உபசாரணை.

(திங்கட்கிழமை காலை 6-15மணிக்கு மரணித்த சகோதரர்களுக்காய்த் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.)

A. S. Francis of Mary,
சபைக்கர்த்தருக்காக

### புத்தக மதிப்புரை

## சமதர்மமும் சமூகதர்மமும்

ஆசிரியர் : T. ஸ்ரீநிவாசன் M. A., L. T.
சரித்திரபோசிரியர், புனிதசூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

பிரசுரமும், கிடைக்குமிடமும் — தமிழ் இலக்கியக்கழகம், தூத்துக்குடி.
விலை அணா 12.

திருச்சி, புனிதசூசையப்பர்கல்லூரியில் பல்லாண்டுகளாக அரசியல்ஆசிரியராகவும், சரித்திரபோசிரியராகவும் இருந்துவருகிறவரும், கல்வித்திறனும், சொல்வன்மையும் படைத்தவருமான கலாநிதி தோமஸ் ஸ்ரீநிவாசன் அவர்கள் முன்பு "சமதர்மம்"என்னும் நூலைஎழுதித் தமிழுலகத்திற்கு வழங்கியவர். தற்போது "சமதர்மமும், சமூகதர்மமும்"என்ற தலையங்கத்துடன் தாம்எழுதியுள்ள இந்தநூலில் அதேபொருளையே அதிகம்விரிவாக விளக்கிக்காட்டியிருக்கின்றார். தத்துவம், அரசியல் முதலிய துறைகளில் பிளேற்றோமுதல் ஸ்ராலின்ஈறுக அறிஞர்கள்பலரும் அக்காலமுதல் இக்காலம்வரை ஆங்காங்கு எழுந்த பலசிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்குத்தேடிய முறைகளை இந்நூலில்வெகுதெளிவாக எடுத்துக்காட்டியிருக்கின்றார். ஐரோப்பியநாடுகளிலும், ஆசியநாடுகளிலும் நிலவுகின்ற பொருளாதாரம், முதலாளி—தொழிலாளிஉறவு, ஆட்சிமுறை, முன்னேற்றதிட்டம் முதலாம் பலபிரச்சினைகளை இதிலே விரித்துக்காட்டியிருக்கின்றார். இன்று உலகநிலை கவலைக்கிடமாக மாறியிருக்கின்றது. கம்யூனிஸம்எனும் போபத்தின் நிழல் ஆசியநாடுகளில் சூழ்ந்துவருகின்றது. அதனால் இன்றுபடிப்படியாக உருவாகிவரும் ஆசியஜனநாயகங்களின்கதி யாதாகுமோவென்றஅச்சம் பிறந்திருக்கிறது. தற்காலப் பொருளாதார சமுதாயதீமைகளால் தோன்றியதே கம்யூனிஸம். ஆயினும், கம்யூனிஸம் தோன்றியிராவிட்டால் இந்தத் தீமைகளை நாம்அறிந்திருக்கவும்முடியாது. அறிந்துஅவைகளை நிவிர்த்திசெய்ய முயற்சித்திருக்கவும்முடியாது. ஆகவே, கம்யூனிஸமாகிய சமதர்மத்துக்கும், அதனைஎதிர்த்து ஒழிப்பதற்கெனப்பிறந்துள்ள 'சமூகதர்மத்துக்குமிடையே மும்முரமான தர்மபோராட்டம் நிகழ்ந்துகொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே, இன்றையசூழ்நிலையிலே தமிழ்நாடு நலம்பெறஉழைப்பதற்கு வேண்டிய தெள்ளியஅறிவை ஊட்டவல்ல "சமதர்மமும், சமூகதர்மமும்" என்ற இவ்வரியஆராய்ச்சிநூலைத் தமிழ்மக்கள்கற்றுப் பயனடையும்படியாகத்தூத்துக்குடி, தமிழ்இலக்கியகழகம்இரண்டாம்பதிப்பாக வெளியிட்டிருப்பது சாலவும்போற்றற்பாலதாகும்.

● ஆசியநாடுகளில் பிறக்கும்குழந்தைகளிலே பத்தில்ஒன்றுமுதல மூன்றில்ஒன்றுவரை ஒருவயதுமுடிவதற்குள் இறந்துவிடுகின்றனவென்று ஓர்ஜப்பானியரான டக்றர்அசாமற்சுவொகா தெரிவித்திருக்கின்றார். அதாவது 1,000குழந்தைகள் பிறந்தால் 100முதல் 300குழந்தைகள்வரை ஒருவருடத்துள் இறந்துவிடுகின்றன. போஷாக்கின்மை, காசநோய், மலேரியாஆதியன லட்சக்கணக்கானகுழந்தைகளைக் கொன்றுவிடுகின்றன.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச். அந்திமோரின்உதவியால் எனது உத்தியோகத்தில் ஏற்பட்ட இடைஞ்சல் விரைவில் நீங்கியதினிமித்தம் நன்றியறிதலாக இதனைப் பிரசுரிக்கிறேன்.

கொச்சிக்கடை D. P. A. Coonghe.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனது மூத்தமகளுக்குத் தோன்றின தொற்றுநோய் அவவுக்கு ஒருதீங்கும் செய்யாமலும், மற்றப் பிள்ளைகளுக்குத் தொற்றுமலும் கூடியசீக்கிரம் குணமடையும்படி திருஇருதயநாதரிடமும், பரிசுத்த சதாசகாயமாதாவிடமும் மன்றுடினேன். எனது வேண்டுதல் கேட்கப்பட்டது. அவர்கள்நாமம் என்றும் புகழப்படுவதாக. பிரசுரிக்கத் தாமதித்ததையிட்டு மன்னிப்புக்கோருகிறேன். இன்னும் எங்களுக்கு உதவிபுரியும்படியும் வேண்டுகிறேன்.

மட்டக்களப்பு N. S. B.

இந்நூலிலே ஆசிரியர்ஒன்றுக்கொன்று முரண்பாடுடைய இருதர்மங்களையும் விளக்குமுகமாகச் சமுதாயத்தில் தொடங்கிக் குடும்பசுயாதீனத்தில் கொண்டுவந்துமுடித்து, "சமுதாயத்துக்காக மனிதன் அல்ல, தனிமனிதருடைய நன்மைக்காகவே சமுதாயம்" என்று தெளிவாகக்காட்டியிருப்பதும் கவனிக்கற்பாலது. மேற்கு ஐரோப்பிய ஜனநாயகங்கள் கம்யூனிஸத்துக்குத் தப்பிக்கொள்ளக் காரணம் என்ன? அதற்காக அந்நாடுகள் கையாண்டஉபாயம்என்ன? பொருளாதாரம் செம்மைப்படுமானல் கம்யூனிஸத்தின்கதி யாதாகும்? ஓர்வாழ்க்கைக் கோட்பாடாகிய கம்யூனிஸத்தின் பலாபலன்கள்எவை? சர்வாதிகார ருஷிய வாழ்க்கைமுறையின் அந்தரங்கம் என்ன? ஜனநாயக அமெரிக்கவாழ்க்கைமுறையின் அந்தரங்கம்என்ன? என்பவைகளெல்லாம் இந்நூலிலே இனிய முறையிலே, எவரும்விளங்கக் கூடிய தமிழ்நடையிலே சிறப்பாக விளக்கிக்காட்டி நல்லஅறிவூட்டியிருக்கும் ஆசிரியரின் அருந்திறனை திறனென்க. அதனால் தமிழ்மக்கள் அனைவரும் இதனைவாசித்துப் பலனடையவேண்டுமென ஆசிக்கின்றோம். நமக்குஅனுப்பியபிரதிகளுக்காக நன்றிகூறுகின்றோம்.

## சூழற் பயிற்சி

ஐந்தாம் வகுப்பு

ஆசிரியர்கள் :
திரு. க. பே. முத்தையா, திரு. ம. விக்ரர்
பதிப்பகம் :
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.
விலை பிரதி — ரூபா 1 சதம் 50.
கிடைக்குமிடம் :
விவேகானந்த அச்சகம்—புத்தகசாலை,
விவேகானந்தாக் கட்டடம்,
யாழ்ப்பாணம்.

தேர்வுச்சித்தி மாத்திரமன்றி, மாணவர்களுக்குப் பரந்தஅறிவுவளர்ச்சியும் கைகூடவேண்டுமென்ற கருத்தைமேற்கொண்டு குறிப்பும், பயிற்சியும் விரவியதாய் ஐந்தாம்வகுப்புக்கென்று அரசினரின் பாடத்திட்டத்திற்கு அமைந்த முறையிலே ஆக்கப்பெற்றுள்ள "சூழற்பயிற்சி"என்ற இந்தஅருமையானநூல் தனது 'குறிப்'பின்கீழ் இலங்கையைப் பற்றி ஐந்தாம்வகுப்பு மாணவர்கள் முக்கியமாக அறிந்திருக்கவேண்டிய இயற்கைவளங்களையும், சமய, சரித்திர சம்பவங்களையும், சுகவாழ்வுபற்றிய விஷயங்களையும், மற்றும் நாம்வசிக்கும் பூமியைப்பற்றிய பொதுஅறிவுக்குரிய விபரங்களையும் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எடுத்துக்கூறுகின்றது. இரண்டாவதான 'பயிற்சி'யின்கீழ் தரப்பட்டிருக்கும் பத்தொன்பதுபயிற்சிகளும் பலதிறப்பட்டகாரியங்களிலே மாணவர்களுக்குச் சிறந்தபயிற்சியை இலகுவில் அளிக்கத்தகும் முறையிலே வகுத்துத் தொகுத்து நிரைப்படுத்தப் பட்டிருக்குந்தன்மையும், அவர்கள் மனோற்சாகத்துடன் பயிற்சிபெறுதற்கான வழிவகைகள் சூட்சமாகக் கையாளப்பட்டிருக்குந் தன்மையும் பாராட்டப்படத்தக்கன. இன்னும் மாணவர்கள் தாங்கள்படித்துவரும் பாடப்புத்தகங்களில் படித்தவைகளை ஞாபகத்திற்கொண்டுவந்து அவைகளை ஆராய்ச்சிசெய்து பயிற்சிக்கு விடையெழுதக்கூடிய நல்லமுறை இதிற்கையாளப்பட்டிருப்பதும் கவனிக்கற்பாலது. இந்நூலின் ஆசிரியர்கள்இருவரும் அரும்பிரயாசையெடுத்துத் தகுந்தஆராய்ச்சியுடனும், அனுபவதேர்ச்சியுடனும் ஆக்கித்தந்திருக்கும் இந்தநூலை மாணவர்கள் தக்கவாறு பயன்படுத்துமிடத்து அடையக்கூடியநன்மை அதிசமாகும். தமிழாசிரியர்உலகம் இதனையும் உவந்தேற்குமென நம்புகின்றோம். நமக்குஉதவிய பிரதிக்காக நன்றிகூறுகிறோம்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவின் அருளாலும், அர்ச். சூசையப்பர், அர்ச். ரேக்கு முனீந்திரன், அர்ச். அந்தோனியார் இவர்களுடைய மன்றாட்டினாலும் நான் தைரோயிட் ஒப்பறேஷன் செய்யப்பட்டுச் சுகமாக வீடுவந்து சேர்ந்தேன். தேவ அன்னையின் புகழ் எங்கும் பரவும் நோக்குடனும், எனது நேர்த்தியின்படியும் இதனைப் பிரசுரிக்கிறேன்.

சில்லாலை மல்லிப்பூ

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 531

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

காரைநகர் மருதடி
செல்லப்பா சிவசுப்பிரமணியம்
சிறுபிள்ளை அவரின் பராமரிப்புக்காரி
காரைநகர்
பி. செல்லப்பா கைம்பெண் தங்கமுத்து
— வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், கந்தர்மடம்
1. இராமுப்பிள்ளை திரையப்பாவும்,
2. பெண் தங்கம்மாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B 531-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1958 ஆம் கார்த்திகை மீ 6 உ வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 12,261/80-ம், இன்னும் ரூபா 10,000-த்திற்கு 24-9-55 தொடக்கம், 22-12-55 வரையும் 100-க்கு 8%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு 22-12-55 தொடக்கம் இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 200-ம்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை அம்மைகோவில் வெளி. பர. நில. இலா. 23 குளி $15\frac{7}{8}$. இதில் தெற்குப்பக்கமாக பர. நில. இலா 15-ம், செய்பயிர், வான்பயிர்களும், கிணறுகளும். எல்லை: கிழக்கு — எதிரிகளுக்குரிய ஆதனங்களும், ஒழுங்கையும் வடக்கு — எதிரிகளுக்குடைய இதன் மீதக்காணி. மேற்கு — மூத்தவி அப்புக்குட்டிக்கும், மறுபேருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு — ரோட்டு.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
24, சப்பெல்வீதி,
யாழ்ப்பாணம். 30-9-58

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 2-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org